

வாங்கிக் கட்டிய மஹிந்த!
உள்ளே **பக். 03**



பெண்களே அணி திரளுங்கள்
உள்ளே **பக். 08**



வடக்கின் பெரும் போர் இன்று ஆரம்பம்
உள்ளே **பக். 10**

பக்கங்கள்: 12 விலை:20 ரூபா

**இனி இது ரகசியம் அல்ல!**

திடீரென மேற்குலக மற்றும் கிழக்கு நாடுகளின் கிழக்கு நாடுகளின் இராஜதந்திரிகளின் 'படையெடுப்பு' யாழ்ப்பாணத்தில்.

பத்திரிகையாளர்களும், பத்திரிகை நிறுவனங்களும் அவர்களைச் சந்திப்பதிலும் கலந்துரையாடுவதிலும் பிஸி. பக்கம் 02 »

காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 மாசி 23 வியாழக்கிழமை 07.03.2019 கதிர் 123

# ஜெனீவாவில் வடக்கு ஆளுநரை களமிறக்குகின்றார் ஜனாதிபதி!

## ஐ.நா. தலையீட்டை அடியோடு எதிர்ப்பதற்காக



கொழும்பு, மார்ச் 07

வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் உட்பட மூன்று பேர் தனது பிரதிநிதிகளாக ஐ.நா மனித உரிமைகள் கவுன்சில் கூட்டத்தொடரில் பங்கேற்கவுள்ளனர் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று அதிரடி அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

ஊடகப் பிரதானிகளுடன் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடத்திய சந்திப்பின்போது அவர் இந்தத் தகவலை வெளியிட்டார். பக்கம் 11 »

## எந்தக் கொம்பன் எதிர்த்தாலும் தூக்குத் தண்டனையில் உறுதி!

### மைத்திரிபால உடும்புப் பிடி

கொழும்பு, மார்ச் 07

போதைப்பொருள் கடத்தல், விற்பனையுடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றுவதில் தான் உறுதியாகவே இருக்கிறார் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஊடக நிறுவனங்களின் பிரதானிகளை நேற்றுச் சந்தித்த ஜனாதிபதி, சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் கலந்துரையாடினார்.

இதன்போது இலங்கையில் தூக்குத் தண்டனையை மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்கு பக்கம் 11 »

## ஐ.நாவுடன் நாங்கள் முரண்படமுடியாது!

### ஜெனீவா முடிவை ஏற்க வேண்டும் என்கின்றார் லக்ஷ்மன் கிரியெல்ல



கொழும்பு, மார்ச் 07

ஐ.நா. மனித உரிமைப் பேரவையுடன் முரண்படாமல், ஒத்துழைப்பு வழங்கும் வகையிலேயே பக்கம் 11 »

## ஜெனீவா விவகாரத்தைக் கையாள மைத்திரி – ரணில் தனித்தனிக் குழு

### அரசுக்குள் மீண்டும் வெடித்தது மோதல்

கொழும்பு, மார்ச் 07

ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடரில் இலங்கை விவகாரத்தைக் கையாள்வதற்கு அரசின் சார்பில் உயர்மட்டக் குழு பங்கேற்பதில்லை என்றும், ஜெனீவாவில் உள்ள இலங்கைப் பிரதிநிதியே அதனைக் கையாள்வார் என்றும் பக்கம் 11 »

## வருட இறுதிக்குள் பொதுத் தேர்தல்!

கொழும்பு, மார்ச் 07

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் இந்த வருடத்தில் பொதுத் தேர்தல் நடைபெறலாம் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுத் தெரிவித்தார்.

ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுடன் நேற்றுக் காலை நடைபெற்ற சந்திப்பின்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார். பக்கம் 11 »

## முன்னாள் கடற்படைத் தளபதிக்கு எதிராகக் குற்றப் பத்திரம் தாக்கல்

கொழும்பு, மார்ச் 07

கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக, முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த பக்கம் 11 »

## முகமாலையில் பயங்கர வெடிப்பொருள்கள் அகற்றுவதற்கு மூன்று ஆண்டுகள் எடுக்கும்

### நோர்வே அமைச்சர் நேற்று தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 07

முகமாலைப் பகுதியில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை 3 ஆண்டு காலப்பகுதிக்குள் அகற்றி முடிப்பது தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டு வருவதாக நோர்வேயின் பக்கம் 11 »

## தெற்கிலிருந்து வடக்குக்கு குழாய் மூலம் குடிதண்ணீர்!

### ஜனாதிபதி மைத்திரி திட்டம்

கொழும்பு, மார்ச் 07

தெற்கிலிருந்து குழாய்கள் ஊடாகக் குடிதண்ணீரை வடக்குக்கு கொண்டுசெல்லும் திட்டம் ஆராயப்பட்டு வருவதாக ஜனாதிபதி மைத்திரிபால பக்கம் 11 »

## வாள்வெட்டுக் குழு தாக்குதல்! மட்டுவிலில் நள்ளிரவு பதற்றம்!!

யாழ்ப்பாணம், மார்ச் 07

சாவகச்சேரி, மட்டுவில் வின்சன் வீதியில் உள்ள வீடு ஒன்றின் மீது நேற்று அதிகாலை 12.15 பக்கம் 11 »

## ஜெனீவாவில் இலங்கையையும் இழுத்துச் சேர்த்து புதிய பிரேரணையை நிறைவேற்றச் செய்ய வேண்டும்

### நேற்றுக் கூட்டமைப்பு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவு

கொழும்பு, மார்ச் 07

ஜெனீவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைக் கவுன்ஸிலின் கூட்டத்தில் இலங்கை தொடர்பாக இம்முறை புதிதாகக் கொண்டு வரப்படும் பிரேரணையை, இம்முறையும் இலங்கையும் சேர்த்து அனுசரணை வகித்து நிறைவேற்ற வைக்க வேண்டும். இதில் இருந்து பக்கம் 11 »

விளம்பரம் மற்றும் செய்தி தொடர்பு
kalaikkathirnews@gmail.com
https://kalaikathir.online

# ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்க ஜே.வி.பிக்கு மஹிந்தர் நிபந்தனை



கொழும்பு,மார்ச்07


நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்க வேண்டுமானால், 13ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டம்மற்றும்தேர்தல்முறைமை என்பனமாற்றம்செய்யப்பட வேண்டும் என எதிர்க் கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியுடன் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின் போது அவர் இக்கருத்தை முன் வைத்துள்ளார். 20 ஆவது திருத்தச்சட்டத்துக்கு ஆதரவு திரட்டும் வகையில் மக்கள் விடுதலை முன்னணி எதிர்க் கட்சித் தலைவருடன் இக்கலந்துரையாடலை முன்னெடுத்தது.

நேற்று மாலை 4.00 மணிக்கு எதிர்க்கட்சித் தலைவரின் காரியாலயத்தில் மக்கள் விடுதலை முன்னணியுடன் இடம்பெற்ற இப்பேச்சுகளில், மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவரும், நடாளுமன்ற உறுப்பினருமான தினேஷ் குணவர்தன, நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும ஆகியோர் மஹிந்த ராஜபக்ஷ தரப்பில் கலந்துகொண்டனர்.

மக்கள் விடுதலை முன்னணியின் சார்பில், அதன் தலைவர் அனுர குமார திஸாநாயக்க, விஜித ஹேரத் மற்றும் சுனில் ஹதுன்னெத்தி ஆகியோர் இக்கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

# கடும் வெப்பமான வானிலையில் 8 மாவட்டங்களுக்கும் எச்சரிக்கை




யாழ்ப்பாணம், மார்ச் 08

வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நாட்டின் 11 மாவட்டங்களில், நாளை கடும் வெப்பமான வானிலை நிலவும்என்றுவளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கைவிடுத்துள்ளது.

இதனால் மக்கள் அவதானமாக இருக்குமாறும்வளிமண்டலவியல் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிழக்கு மாகாணத்தில் உள்ள, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை , வடமத்திய மாகாணத்தில் உள்ள அனுராதபுர, பொலன்னறுவ மற்றும் புத்தளம் மாவட்டங்கிளலேயே இவ்வாறு கடும் வெப்பமான வானிலை நிலவு மென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன்தினம் கிழக்கு நாடு ஒன்றின் தூதுவர் மற்றும் அவரது அணியினருடன் சந்திப்பு மற்றும் இரவு விருந்து எனக்கு.

நேற்று மற்றோர் கிழக்கு நாட்டுக் கண்டத்தின் உயரதிகாரிகளுடன் மாலைநேரத் தேநீர். பின்னர் நேற்றிரவு வெள்ளைக்காரத் தூதருடன் இரவு விருந்து.

எல்லாமே ஐந்து நட்சத்திரக் ஹோட்டல்களில்.

இதேசமயம், அமெரிக்கத் தூதர் அம்மணியும், ஜேர்மன் தூரதர் அம்மணியும் கூட யாழ். நகரில் நிற்கின்றார்கள் என்று கேள்வி.

அவர்கள் எந்தெந்தப் பத்திரிகையாளர்களைச் சந்திக்கப் போகின் றார்கள் என்று தெரியவில்லை.

'நாலு பேர் நாலு சொல்லுவார்கள்' என்ற பேச்சு மொழி நம் மத்தியில் உண்டல்லவா? இப்படி 'நாலும் சொல்லும் நாலு பேரில்' ஒருவராகப் பத்திரிகையாள்களையும் பார்கின்றார்கள் போலும்.

அதனால் குடாநாட்டில் அரசியல் தலைவர்கள், பொதுமக்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் எனப் பலதரப்பினரதும் கருத்து நிலைப்பாடு யாது எனக் கேட்டறிவது என்றால், பொதுப்படையாகப் பத்திரிகையாளர்களிடம்கேட்டறிந்தால் போதும் என்ற கருத்து நிலை அவர்களுக்கு (கொழும்பில் பணியும் இராஜதந்திரிகளுக்கு) உண்டு போலும். அதனால்தான் எமக்கு அடிக்கடி ஐந்து நட்சத்திர விடுதிகளில் மதிய போச னமோ அல்லது இரவு நேர விருந்தோ தாரளமாக'ஓஸியில்கிடைக்கின்றது என்று நினைக் கின்றேன்.

நேற்றிரவு வெள்ளைக்காரத் தூதரிடம் தாராளமாக எமது மக்களின் நிலைப்பாட்டை மனந்திறந்து எடுத்துரைத்தேன். அவரும் பரிவுடன் செவிமடுத்தார்.

*"பிரபாகரனின் துப்பாக்கிகள் சத்தத்துடன் கனன்று கொண்டிருந்த போது தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைக் குரல் உங்களின் - சர்வதேசத்தின் - காதுகளில் தாராளமாகக் கேட்டது. ஆனால் இன்று பிரபாகரனின் துப்பாக்கிகளின் சத்தம் ஓய்ந்ததும் இலங்கைத் தமிழரின் நியாயமான கோரிக்கைகள் உங்களின் காதுகளில் கேட்கவே இல்லை"* - என்று தொடங்கினேன்.

*"உங்களின் (சர்வதேசத்தின்) பொறுப்பற்றபோக்கால்-இலங்கை விடயத்தில் இப்போது நீங்கள் பிரதிபலிக்கும் விட்டேத்தியான போக்கினால் - பிரபாகரனின் ஆயுதம் தாங்கிய போராட்டம் நியாயமானதே என்பதை உறுதிப்படுத்தும் வேலையைத்தான் நீங்கள் இப்போது செய்கின்றீர்கள்"*- என்பது வரை எனது கருத்து நிலைப்பாடு சற்றுக் கடுமையாக இருந்தது.

ஆனால், விடாமல் சுமார் பத்துப் பதினைந்து நிமிடம் நான் இந்தப் பாணியில் கொட்டித் தீர்த்தமையை எந்தப் பிரதிபலிப்பும் காட்டாமல் செவிமடுத்தார் அவர்.

*"எங்களுக்கு நியாயமான தீர்வைப் பெற்றுத் தர வேண்டிய கடப்பாடு - கட்டாயப் பொறுப்பு - உங்களுக்கு உண்டு"* என்றேன் நான்.

*"எங்கள் இறைமையையும் சேர்த்து சிங்களவர்களிடம் தானம் கொடுத்தவர்களுக்கு எங்களுக்கு நியாயம் செய்ய வேண்டிய கட்டாயக் கடப்பாடு உள்ளது"*என்று நான்கூறியமையை அவர்மறுக்கவில்லை.

ஆனால், எழுபது வருடங்கள் ஒன்றாகச் சேர்ந்து வாழ்ந்து விட்டீர்களே என்றார் அவர்.

*"ஆம். உங்களால் செய்து வைக்கப்பட்ட கட்டாயக்கலியாணத்தினால் மாட்டிவைக்கப்பட்ட பெண் பகுதி நாங்கள். இப்போதாவது விவாகரத்து வாங்கித் தந்து எங்கள் விடுதலையை நீங்கள் உறுதி செய்யக்கூடாதா?"*- என்ற பாணியில் அமைந்தது என் வாதம்.

பிரபாகரனின் இன்னொரு சிஷ்யனைச் சந்தித்து விட்டோம் என்று அவர் நினைத்திருப்பார்.

என் மனதில் பட்டதைச் சொன்னேன். அதை மனதில் எடுப்பதும், ஏற்பதும், நிராகரிப்பதும் அவர்களைப் பொறுத்தது.

ஆனால், என் மனதில் அரித்துக் கொண்டிருந்த ஓர் விடயத்தைச் சரியான தரப்பிடம் - சரியான முறையில் - எடுத்துக் கொட்டிவிட்டோம் என்ற திருப்தி எனக்கு.என் கருத்தையும் விளக்கங்களையும் கேட்பதும், நிராகரிப்பதும் அவர்கள் Wisdom. அது பற்றி நான் கவலைப்படவில்லை.

என்ன வாசகர்களே! நான் சொன்ன கருத்துச் சரிதானே...!

-மின்னல்-

# மன்னார் மனிதப் புதைகுழி எலும்புகளின் கார்பன் சோதனை அறிக்கை கிட்டியது



மன்னார் - மனித புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பான அதிகாரபூர்வ கார்பன் பரிசோதனை அறிக்கை நேற்று மன்னார் நீதிமன்றத்துக்கு சட்டபூர்வமாகக் கிடைத்துள்ளதாக அகழ்வு பணிக்குப் பொறுப்பான சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மன்னார் மனித புதைகுழியில் மீட்கப்பட்ட- சந்தேகத்திற்கு இடமான - மனித எச்சங்கள் கடந்த மாதம் கார்பன் பரிசோதனைக்கும் மேலதிக ஆய்வுகளுக்குமாக அமெரிக்காவிலுள்ள ஆய்வு கூடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன. அந்தப் பரிசோதனை அறிக்கை 14 நாள்களில் கிடைக்கப் பெறும் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும் அந்த அறிக்கை நீண்ட கால தாமதத்தின் பின்னர் சட்ட ரீதியான ஆவணமாக மன்னார் நீதிவான் நீதிமன்றத்துக்குக் கிடைத்துள்ளதாக சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கை தொடர்பான எந்த விவரங்களையும் தன்னால் வழங்க முடியாது எனவும் அந்த அறிக்கை தொடர்பாக ஆர்வம் உள்ளவர்கள் மன்னார் நீதிவான் நீதிமன்றத்தின் ஊடாக அதனைப் பெற்று கொள்ள முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

மனித புதை குழியின் அகழ்வு பணிகளை தொடர்ச்சியாக மேற்கொள்வதா? இல்லையா? என்பது தொடர்பாக நீதிவான், பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் மற்றும் அலுவலக பிரதிநிதிகளுடன் கலந்துரையாடிய பின்னரே முடிவெடுக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுவரை குறித்த மனித புதைகுழியில் இருந்து 335 மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளமையுடன் 318 மனித எச்சங்கள் முழுமையாக அப்புறப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு புதிய நீதியரசர் நேற்று பதவியேற்பு





கொழும்பு,மார்ச்07

இதுவரை மேல் நீதிமன்ற நீதிபதியாகப் பணியாற்றி வந்த பந்துல கருணாரத்ன நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றின் புதிய நீதியரசராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

இதேவேளை, மேன்முறையீட்டு நீதிமன்ற பதில் தலைவராக மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் தீபாலி விஜேசுந்தரவும் நேற்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார் எனவும் ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

# கைப்பற்றிய போதைப்பொருள்கள் கட்டுநாயக்காவில் அழிக்கப்படும்





கொழும்பு, மார்ச் 07

இலங்கையில் இதுவரை கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்கள் கட்டுநாயக்கவில்வைத்து அழிக்கபடுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஊடகப் பிரதானிகளுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறினார்.

கட்டுநாயக்கவில் வைத்து கைப்பற் றப்பட்ட போதைப்பொருள்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 1ஆம் திகதி நீதிபதிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் முன்னிலையில் அழிக்கப்படும் என ஜனாதிபதி குறிப்பிட்டார். (ஐ)

காலைக்கதிர் Kalaikathir



# சபையில் சஜித்தை சீண்டி வாங்கிக்கட்டிய மஹிந்த!

## இருவரும் கடும் வாக்குவாதம்





கொழும்பு, மார்ச் 07

அமைச்சர் சஜித் பிரேமதாஸ வுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்தராஜபக்ஷவுக்கும் இடையில் நேற்றுப் புதன்கிழமை நாடாளு மன்றத்தில் வாக்குவாதம் இடம்பெற் றது.

கடந்த நாடாளுமன்ற அமர் வின்போது எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த, சினிமாத்துறை, கலைத் துறை மற்றும் கலைஞர்களின் நிலைமைகள் குறித்து கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு நாடாளுமன்றத்தில் நேற்று அமைச்சர் சஜித் பிரேம தாஸ பதில் வழங்கினார்.

கடந்த ஆட்சி காலத்தில் கலை யுடன் தொடர்புபட்ட பல்வேறு வேலைத்திட்டங்கள் நிறுத்தப் பட்டன எனவும், இந்த ஆட்சியில் அவை மீண்டும் முன்னெடுக் கப்பட்டன எனவும் அமைச்சர் சஜித் தெரிவித்தார்.

இதன்போது ஒழுங்குப் பிரச் சினை எழுப்பிய எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, 'ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்ன மும் காலம் உள்ளது' எனக் கூறி னார்.

இதற்குப் பதிலளித்த அமைச் சர் சஜித் நீங்கள் என்னை ஜனாதி பதியாக கற்பனை செய்கின்றீர் களா, இதை எண்ணிப்பார்க்கின்ற போதுஎனக்குமகிழ்ச்சியாகஉள்ளது. நீங்கள் இவ்வாறு நினைப்பீர்கள் என நான் கனவில் கூட நினைக்க வில்லை. ஆனால் இப்போது நான் கூறுவது ஜனாதிபதி குறித்த விடயம் அல்ல.

இது உங்களின் காலத்தில் இடம் பெற்ற கலை அடக்குமுறை குறித்து நீங்களே எழுப்பிய கேள்விக்கான பதில். இந்தப் பதில்களை கூறும் போது உங்களால் கேட்டுக்கொண்டு இருக்க முடியவில்லை. காதுகள் வலிக்கின்றன என நினைக்கின் றேன். ஆனாலும் நான் இதனைக் கூறியே ஆகவேண்டும். எனக் குறிப்பிட்டார். (ஐ)

# எல்லையை மீறும் இராஜதந்திரிகள்

## ஜனாதிபதி சீற்றம்



கொழும்பு, மார்ச் 07

சில வெளிநாட்டுத் தூதுவர்கள் தமது எல்லையை மீறுகிறார்கள் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதிருப்தி வெளியிட் டுள்ளார்.

நேற்றுக் காலை ஜனாதிபதி செயலகத்தில் ஊடகங்களின் ஆசிரியர்களுடன் நடத்திய சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்துள் ளார்.

சில வெளிநாட்டு இராஜதந்திரிகள் தமது எல்லையை மீறுகிறார்கள். எதற்காக பாதுகாப்பு அமைச்சின் கீழ் பொலிஸ் திணைக்களத்தை வைத்திருக்கிறேன் என்று அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

அவர்களுக்கு நான் 'சரியான முறை யில்' பதிலளித்தேன்.

மூன்று அமைச்சுக்களுக்கு மேல் நான் வைத்திருப்பதற்கு அனுமதி யில்லை. இருந்தாலும், எத்தனை நிறு வனங்களையும் வைத்திருக்க முடி யும்.

வர்த்தமானி அறிவிப்பின் மூல மாகஎந்தவொரு அரசநிறுவனத்தையும் நான் எனது கட்டுப்பாட்டில் கொண்டு வர முடியும்.

பொலிஸ் திணைக்களத்துக்கு மேலதிகமாக, அரச அச்சகத் திணைக் களத்தையும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வந்துள்ளேன்.

பொலிஸ் திணைக்களத்தின் உள் கதை சோகமானது. அதனை ஊடகங்கள் விசாரியுங்கள். - என்று அவர் தெரிவித் தார். (ஐ)

# மட்டக்களப்பில் நேற்று எலும்புக்கூடுகள் மீட்பு!



மட்டக்களப்பு, மார்ச் 07

மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சத்து ருக்கொண்டானில் மனித எலும் புக்கூடுகளின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்தப்பிரதேசத்தில்நேற்றுப் புதன்கிழமை காலை குழி யொன்று தோண்டப்பட்டபோதே மனித எச்சங்கள் வெளித் தோன்றின.

சத்துருக்கொண்டா னில் புதிதாக அமைக் கப்பட்டுவரும் வீட்டுத் திட்டப் பகுதியிலேயே இந்த மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளதாக ஏறா வூர் பொலிஸார் தெரி வித்தனர்.

இந்தமனிதஎச்சங்கள் சுமார்25வருடங்களுக்கு முற் பட்டவையாக இருக்கலாம் எனப் பொலிஸார் கூறினர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மட்டக்களப்புத் தலைமையகப் பொலிஸார், ஏறாவூர் பொலி ஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டுள்ளனர். (ஐ)

# கஞ்சாப் பண்ணை தீ வைத்து அழிப்பு

அம்பாறை, மார்ச் 07

அம்பாறை – பன்னல்கம பிரதேசத்திலிருந்து 8 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள வனப் பகுதியொன்றிலிருந்து கஞ்சாப் பண்ணை யொன்று கண்டுபிடிக்கப்பட்டு தமண பொலிஸா ரால் சுற்றிவளைக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது.

தமண பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்தே இந்த சுற்றிவளைப்பு மேற் கொள்ளப்பட்டது.

அந்தப் பண்ணையிலிருந்து 3,500 கஞ்சாச் செடிகளை தீயிட்டு அழித்தனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# மன்னாரில் கிளைமோர் மீட்பு!

மன்னார், மார்ச் 07


மன்னார் நகரில் ஆபத்தான கிளைமோர் குண்டு ஒன்றைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

மன்னார் பெரியகடை பள்ளிவாசல் ஒழுங்கை மற்றும் மீன் சந்தைப் பகுதிக்குச் செல்லும் பிரதான பாதையிலிருந்து இந்தக் கிளைமோர் குண்டு நேற்று மீட்கப்பட்டது.

மன்னார் நகர சபை ஊழியர்களால் சுத்தம் செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டபோது குப்பைக்குள் இருந்து இந்தக் குண்டு மீட்கப்பட் டது.

இந்தக் கிளைமோர் குண்டு சுமார் 3 கிலோ கிராம் நிறை கொண்டது எனப் பொலிஸார் தெரி வித்தனர்.

அந்தப் பகுதியில் பழைய இரும்புகள் கொள்வனவு செய்யும் கடைகள் காணப்படுகின் றமையால், பழைய இரும்புப் பொருட்களுடன் கலந்து இந்தக் கிளைமோரும் வந்திருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ள னர். (ஐ)



# போதைப்பொருள் கடத்தலைத் தடுக்க உயர்தொழில்நுட்பத்தைப் பெற முதலீடு

கொழும்பு, மார்ச் 07

போதைப்பொருள் கடத்த லைக் கட்டுப்படுத்த உலகிலுள்ள உயர்தர தொழில்நுட்பத்தைப் பெற்றுக்கொள்ள முதலீடு செய் யவுள்ளதாக ஜனாதிபதி தெரிவித் துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுநடந்த ஊடகப்பிரதானிக ளுடனான சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.

இலங்கையில் அண்மைக் காலமாக போதைப்பொருள் கடத் தல் அதிகரித்துவரும் நிலையி லேயே ஜனாதிபதி இந்த நடவ டிக்கையை மேற்கொண்டுள் ளார். (ஐ)

# இலஞ்சம், ஊழல்களுக்கு எதிராக மட்டக்களப்பில் உண்ணாவிரதம்



மட்டக்களப்பு, மார்ச் 07

இலஞ்ச ஊழல்கள் தொடர்பாக விசாரணை களை முன்னெடுக்குமாறு கோரி மட்டக்களப்பில் அடையாள உண்ணாவிரதப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

மாவட்ட செயலகம் முன்பாக நேற்றுக் காலை முதல் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட் டது.

ஊழலுக்கு எதிரான மக்கள் இயக்கம் என்ற பெயரில், இலஞ்ச ஊழல் அற்ற சமூகத்தை உருவாக்குவோம் எனும் தலைப்பில் இந்த அடையாள உண்ணாவிரதப் போராட்டம் மேற் கொள்ளப்பட்டது.

மட்டக்களப்பு, செங்கலடிப் பிரதேச செயலாளர் இந்தப் பகுதிகளில் பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டுவருகிறார் என்றும், இது தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு முறையிட்டுள்ள நிலையில் அந்த முறைப்பாட்டாளர்களை அச்சுறுத்தும் வகையில் பிரதேச செயலாளர் செயற்படுகின்றார் என்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இந்நிலையில், பிரதேச செயலாளர் மீதான இலஞ்ச, ஊழல் மோசடி குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யக் கோரியே தாம் இந்த போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர் என அவர் கள் கூறினர். (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## மதத்தின் பெயரால் ஐக்கியம்

*"இந்து - கத்தோலிக்க முரண்பாடுகளை ஏற்படுத்தும் தீய சக்திகளின் முயற்சிகளுக்கு இடமளிக்காதீர்கள்!"*

- இப்படி பகிரங்கமாகவும் வெளிப்படையாகவும் கோரியிருக்கின்றார் ஓய்வுபெற்ற நீதியரசரும், தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான சி.வீ.விக்னேஸ்வரன்.

தீவிர இந்துத்துவாதி என்று கருதப்பட்ட - அப்படி பலராலும் கவனிக்கப்படுகின்ற - ஒரு தலைவரிடமிருந்து மிகுந்த அரசியல் முதிர்ச்சித்தனத்துடன் இந்தக் கோரிக்கை வந்திருக்கின்றது.

மன்னார் மோதல் சம்பவம் இடம்பெற்றபோது - அங்கு இந்து, கிறிஸ்தவ முறுகல் ஏற்பட்டபோது - அதை வைத்து வாக்குத் திரட்டும் அரசியல் நோக்கத்தில் பல தமிழ் அரசியல் தலைவர்களும், அவர்தம் ஊடகக் குரல்களும் ஒலித்தமை வேதனைக்குரியது. ஒரு வகையில் அது அரசியல் அற்பத்தனம் என்றே விமர்சிக்கத்தக்கதாக அமைந்தது.

விரல் விட்டு எண்ணக்கூடிய சில அரசியல் தலைவர்களே இது விடயத்தில் வெளிப்படையாகவும், உறுதியோடும், நடுநிலைப் போக்கோடு செயற்பட்டு ஏற்பட்ட முறுகலையும், பதற்றத்தையும் தணிக்கும் விதத்தில் பொறுப்புடன் கருமமாற்றினர்.

சாள்ஸ் நிமலநாதன் எம்.பி., முன்னாள் முதல்வர் விக்னேஸ்வரன், சிவசக்தி ஆனந்தன், டக்ளஸ் தேவானந்தா போன்ற ஒரு சிலரே இந்துக்கள் - கிறிஸ்தவர்கள் மோதலின் விளைவு தமிழினத்துக்குச் சாபக்கேடாகும் என்ற யதார்த்த உண்மையைத் தமிழ் மக்களுக்கு புரிய வைக்கும் விதத்தில் அறிவிப்புகளை - அறிக்கைகளை - வெளியிட்டனர்.

வேறு சில தமிழ்த் தலைவர்களோ இவ்விடயத்தில் தாங்களே நீதிபதியாகி சரி, பிழைகளைத் தூக்கில் பிடித்துக்காட்டி, அதன் மூலம் எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றும் வகையில் நடந்து கொண்டனர்.

இந்த முரண்பாட்டின் விளைவு தமிழினத்துக்கு எத்தகைய மோசமான பாதிப்பைத் தரவல்லது என்பதைத் தமிழ்த் தலைவர்கள் புரிந்து கொண்டிருப்பார்களாயின் -

அந்தச் சம்பவத்தில் யார் சரி, யார் பிழை என்பதைப் பிரதானப்படுத்தாமல் -

அல்லது அந்தச் சம்பவத்தை அடுத்து எழுந்த சீற்ற அலையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுகின்றமை குறித்துச் சிந்திக்காமல் -

நிச்சயம் செயற்பட்டிருப்பார்கள் என்று கருதுகிறோம்.

கிறிஸ்தவர்களான செல்வம், சுமந்திரன் மற்றும் காளிபக்தரும், கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் போன்றோரிடமிருந்து தமிழர்கள் மத்தியிலான இந்த முக்கிய பதற்றச் சம்பவம் குறித்து எந்த அசுமாத்தமும் இதுவரைப் பிரதிபலிக்கப்படவில்லை.

எல்லா விடயங்களுக்கும் முந்திக் கொண்டு கருத்து வெளியிடும் ரெலோ மற்றும் புளொட் தரப்புகளும் கூட பம்மிக் கொண்டிருந்தமையின் பின்னணி யாது என்பதுதான் கேள்வி.

நடந்த சம்பவங்கள் தொடர்பாக முதல் நாள் வெளியான ஊடகச் செய்திகள், இந்து மக்கள் மத்தியில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான உணர்வு அலைகளை மத ரீதியாகத் தட்டி எழுப்பி சீற்ற நிலைப்பாட்டை ஏற்படுத்தியிருக்கையில் -

எண்ணிக்கையில் பெரும்பான்மையான இந்துக்களுக்குச் சார்பாக நிலைப்பாடு எடுப்பது அரசியல் ரீதியாக வசதியானது என்று கருதியோ -

அல்லது வெளியான செய்திகளின் அடிப்படையில் இந்துக்கள் தரப்பில் நியாயம் இருப்பதாகக் கருதியோ -

சில தலைவர்கள், நேரடியாக இல்லாவிட்டாலும் மறைமுகமாகவேனும் சில கருத்துக்களை வெளியிட்டனர் என்பது அவதானிக்கத்தக்கது.

எது, எப்படி என்றாலும் அந்த வளைவை வன்முறை மூலம் அகற்ற முயன்றமை தவறு என்பது மறுக்கற்பாலதல்ல. அதைக் கண்டிக்கிறோம் என்று கூறுவது நியாயமானதுதானே, அது பிழை சொல்ல முடியாதுதானே எனக் கருதுமாற்போல, தாங்கள் செயற்பட்டு சில அரசியல் தலைவர்கள் தப்பிக் கொள்ள முயன்றிருக்கின்றார்கள். அதன் மூலம் இவ்விடயத்தில் சீற்ற முற்றிருக்கும் - தமிழர்கள் மத்தியில் பெரும்பான்மையினரான - இந்துக்களை சமாளித்துத் தங்கள் வாக்கு வங்கியைத் தாஜா படுத்தியாயிற்று என்ற திருப்தி அவர்களுக்கு வந்திருக்கலாம்.

ஆனால், இத்தகைய நியாயம் பிளக்கும் சமாளிப்பு ஒட்டுமொத்த தமிழினத்தின் நலனுக்கு நன்மை பயக்கப் போவதில்லை என்பது தெளிவு.

தமிழர்களின் உரிமைப் போராட்டத்தில் இந்து - கத்தோலிக்க ஐக்கியம் எத்துணை முக்கியமானது, இந்தப் போராட்டத்தில் கிறிஸ்தவர்கள் ஆற்றிய அரும்பணி என்பவை பற்றி எல்லாம் முன்னாள் முதல்வர் சி.வீ.விக்னேஸ்வரன் விலாவரியாக எடுத்துரைத்த அம்சங்களை நாமும் முழுமையாக ஏற்றுக்கொண்டு, அவற்றைக் கருத்திலெடுக்குமாறு தமிழ் பேசும் சமூகத்திடம் பரிந்துரைக்கிறோம்.

ஜெனீவா விவகாரம் இன்று மிக முக்கிய கட்டத்தை அடைத்திருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் - சமயத்தில் - தமிழரின் ஒற்றுமை மிக மிக அவசியமாக, அத்தியாவசியமாக வேண்டப்படுகின்றது.

இந்த சமயத்தில் இத்தகைய இந்து - கிறிஸ்தவ முரண்பாடு தமிழரின் எதிர்காலக் கனவில் ஆழமான - மீள முடியாத - பின்னடைவுகளை ஏற்படுத்திவிடும்.

இந்தப் பிரிவில் குளிர்காய முயலும் அரசியல் சக்திகளைத் தமிழ்மக்கள் அடையாளம் கண்டு புறம் ஒதுக்குவது காலத்தின் கட்டாயமாகும்.

முன்னாள் முதல்வர் விக்னேஸ்வரன் கூறியமைபோல பொறுத்தார் பூமியாள்வார். மதத்தின் பேரால் பொங்கி எழுந்து எமது இனத்தின் எதிர்காலத்தைக் குட்டிச்சுவராக்காமல் இருப்போமாக!

# வடக்கு முஸ்லிம்கள் மீள்குடியேற்றத்துக்கு வரவு - செலவுத் திட்டத்தில் முன்னுரிமை!

## அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 07

அரசு முன்வைத்துள்ள வரவு - செலவுத் திட்டம் வரவேற்கத்தக்க வகையில் அமைந்துள்ளது. இந்த முன்மொழிவுகளை எதிர் வரும் ஓகஸ்ட் மாதத்துக்குள் நிறைவேற்றும் வேலைத் திட்டத்தை அரசு மேற் கொண்டுள்ளதாக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

கடந்த வருடம் முன்வைக்கப்பட்ட வரவு - செலவுத் திட்ட யோசனைகளை நடைமுறைப் படுத்தவில்லை என்ற குற்றச்சாட்டு இருந்து வருகின்றது.

இருந்தபோதும் இம்முறை வரவு - செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளை எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்திற்குள் நடைமுறைப்படுத்த அரசு முயற்சிகளை எடுத்திருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் -

கடந்த வரவு - செலவுத் திட்ட முன் மொழிவுகளை நடைமுறைப்படுத்த முடியாமல்போனமைக்கு நாட்டில் ஏற்பட்ட அரசியல் சூழ்ச்சியும் காரணமாகும்.

இதனைப் படிப்பினையாகக் கொண்டு இந்த வரவு - செலவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான சகல நடவடிக்கைகளையும் அரசாங்கம் முன்னெடுக்கும்.

வரவு - செலவுத் திட்டத்தில் சாதாரண மக்களுக்கு பல சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. அரச ஊழியர்கள், விவசாயிகளுக்கும் பல நன்மைகள் இருக்கின்றன.

அதே போன்று வடக்கில் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட மக்களை மீளக்குடியேற்ற தேவையான வளங்களைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே இந்த வரவு - செலவுத் திட்டம் வரவேற்கத்தக்கதாக அமைந்துள்ளது - என்றார். (ஐ)

# 4ஆண்டுகளில் ரூ. 5 ட்ரில்லியன் கடன் அரசின் மிகப் பெரும் சாதனை இது

## பந்துல குணவர்தன சாடல்

வெறும் நான்கு ஆண்டுகளுக்குள் ஐந்து ட்ரில்லியன் ரூபா கடன் பெற்று அரசு பெரும் சாதனை படைத்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

2019ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியைப் பொறுப்பேற்கும்போது நாட்டின் கடன் தொகை 2 ட்ரில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது.

இந்த தொகை பத்து ஆண்டுகால எமது ஆட்சி நிறைவின் போது 7 ட்ரில்லியன் ரூபா அதிகரித்தது. ஆனால், நல்லாட்சி அரசு பொறுப்பேற்று வெறும் நான்கு ஆண்டுகளில் கடன் தொகை ரூ.12 ட்ரில்லியனாக அதிகரித்துள்ளது.

நாட்டின் கொடூரமான யுத்தத்தை நிறைவு செய்யவும், அதன் பின்னர் வடக்கு - கிழக்கில் அபிவிருத்திகளை மேற்கொள்ளவுமே நாம் கடன் பெற்றோம்.

ஆனால், இந்த அரசு என்ன செய்துள்ளது. விமான நிலையங்கள் அமைத்தார்களா?, நெடுஞ்சாலைகளை அபிவிருத்தி செய்தார்களா?, இன்றேல் யுத்தத்தை நிறைவு செய்தார்களா? - என்றார்.

# நாலக்கவின் விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, மார்ச் 07

ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரைக் கொலைச் செய்ய சதித்திட்டம் தீட்டப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக்க டீ சில்வாவின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

கோட்டை பிரதான நீதிவான் ரங்க திசாநாயக்க முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே, இவரை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (ஐ)

# 5 கிலோ கொக்கெய்னுடன் வெளிநாட்டுப் பிரஜை கைது



ஐந்து கிலோ கிராம் கொக்கெய்ன் போதைப்பொருளுடன் வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என சுங்கத் திணைக்கள பிரதி ஊடகப் பேச்சாளர் பிபில மினுவான்பிட்டிய தெரிவித்தார்.

சென்னையிலிருந்து கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வருகை தந்த பொலிவியா நாட்டைச் சேர்ந்தவரிடமிருந்தே இந்தப் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

60 வயதுடைய இந்த நபரின் பயணப் பொதியில் மறைத்துக் கொண்டுவரப்பட்ட ஏழரைக் கோடி ரூபா பெறுமதியான ஐந்து கிலோ கிராம் எடையுடைய கொக்கெய்ன் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் போதை ஒழிப்புப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக சுங்கத் திணைக்கள பிரதி ஊடகப் பேச்சாளர் பிபில மினுவான்பிட்டிய கூறினார்.

# உச்சம் தொட்டது வெப்பம் !

காற்றுடன் கூடிய சீரற்ற செயற்பாட்டின் காரணமாக உடலில் உள்ள வெப்பத்தின் அளவு ஓரளவு அதிகரித்து இருப்பதாகச் சுகாதார அதிகாரிகள் சுட்டிகாட்டியுள்ளனர்.

இதனால் கூடிய அளவு தண்ணீரை பருகுவதன் மூலம் இந்த நிலையை கட்டுப்படுத்த முடியும்.

இதேபோன்று எதிர்வரும் இரண்டு மாத காலப்பகுதியில் ஆகக்கூடிய வெப்பம் காணப்படக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது

இதன்போது திறந்த வெளியில் செல்லும் போது அவதானத்துடன் செல்ல வேண்டும்.


சூரிய வெளிச்சம் நேரடியாக விழும் வகையில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் வாகனங்களில் நீண்ட நேரம் இருக்கக்கூடாது என்றும் சிறு பிள்ளைகளை வாகனத்துக்குள் இருப்பதை தவிர்த்து கொள்வதாகவும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## நாளை

08.03.2019
வெள்ளிக்கிழமை

நட்சத்திரம்: உத்திரட்டாதி மு.இ 10.53 வரை
திதி : துதியை பி.இ 1.07 வரை
சுபநேரம் : 6.24 – 7.54 வரை
இராகுகாலம் : 10.54 – 12.24 வரை

# கண்டிப் பேரணியில் பங்கேற்கமாட்டேன்



## சரியான நேரத்தில் அரசியலுக்கு வருவேன் என்கிறார் கோட்டா

கொழும்பு, மார்ச் 06

கண்டியில் நாளை நடைபெறவுள்ள சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பேரணியில், தாம் கலந்து கொள்ளப் போவதில்லை என்று முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாளை கண்டியில் நடத்தப்படவுள்ள பேரணியில் கோட்டாபய ராஜபக்ஷ, தனது முதலாவது அரசியல் மேடையில் ஏறவுள்ளார்என்றுசெய்திகள்வெளியாகியிருந்தன.


இந்தநிலையில், கடந்த திங்களன்று நடந்த நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றிய கோட்டாபய ராஜபக்ஷ,

"மார்ச் 8ஆம் திகதி நடைபெறவுள்ள பேரணிக்கு எனக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. அதில் நான் பங்கேற்க மாட்டேன்.

நான் அரசியலில் நுழைவதற்கு இன்னமும் காலம் உள்ளது, நேரம் வரும் போதும், நான் அரசியலுக்கு வருவேன்" என்று கூறியுள்ளார்.

மேலதிக தகவல்கள் எதையும் அவர் வெளியிடவில்லை. (ஐ)

## மின்தடை



யாழ்ப்பாணம், மார்ச்07

உயர் அழுத்த மற்றும்தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை –

**கிளிநொச்சி பிரதேசத்தில் -**

திருவையாறு, இரணைமடு, சாந்தபுரம், SFHQ இரணைமடு ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில் -**

பட்டாணிச்சூர் கிராமத்திலும் –

**மன்னார் பிரதேசத்தில் -**

நானாட்டான் ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

(இ)

## பொலனறுவையில் ஆர்ப்பாட்டம்



இம்முறைபெரும்போகத்தில், ஒருகிலோநெல்லுக்கான விலையை 50 ரூபாவாக அதிகரிக்குமாறு கோரி பொலனறுவை விவசாயிகள் நேற்றுக் காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் 600 விவசாயிகள் பொலனறுவை – மட்டக்களப்பு பிரதான வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டம் காரணமாக, போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதுடன் பொலனறுவை நகருக்கு வந்த உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கினர். (ஐ)

## கிளிநொச்சி கொலைச் சம்பவம்;

## வெளிநாட்டுக்குத் தப்பிக்க முயன்ற சந்தேக நபர் கைது!

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர், வெளிநாட்டுக்குத் தப்பிச் செல்ல முற்பட்டபோது கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி, உதயநகர் பகுதியில் குடும்பத் தகராறு காரணமாக ஒரு பிள்ளையின் தந்தையான காந்தலிங்கம் பிரேம ரமணன் என்பவர் நேற்று முன் தினம் கொலை செய்யப்பட்டிருந்தார்.

கொலை செய்யப்பட்டவருக்கும் அவரது மைத்துனருக்கும் இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாகவே அவர் கொலை செய்யப்பட்டார் எனப் பொலிஸார் முன்னர் கொலையுடன் தொடர்புடையவர் எனத் தெரிவித்த ஒருவர் நேற்றுமுன்தினம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்திருந்தார்.

இந்நிலையிலேயே இந்த சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் ஒருவர் வெளிநாட்டுக்குத் தப்பிச் செல்ல முற்பட்டபோது கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## திருக்கேதீஸ்வரம் முரண்பாடுகள் சர்வதேசத்தைத் திசை திருப்பவா?

### சிவசக்தி ஆனந்தன் கேள்வி



வவுனியா, மார்ச் 06

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினை சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்த்துள்ள நிலையில், திருக்கேதீஸ்வரம் பகுதியில் இடம்பெற்ற சம்பவம் சர்வதேசத்தைத் திசை திருப்பும் முயற்சியா என ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கேள்வி எழுப்பியுள்ளது.

இது தொடர்பாக அந்தக் கட்சியின் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

அண்மையில் திருக்கேதீஸ்வரம் பகுதியில் கிறிஸ்தவர்களுக்கும் இந்துக்களுக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாட்டைக்கொண்டு எம்மைப் பிளவுபடுத்துவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கக்கூடாது.

ஒடுக்கப்பட்ட தேசிய இனமான தமிழ்த் தேசிய இனத்தினராகிய எம்மைப் பல வழிகளிலும் பிரித்தாள்வதற்கு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் சதித் திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

எமது உரிமைப்போராட்டத்தை வென்றெடுப்பதற்கும் எமக்கான நீதியைப் பெற்றுக்கொள்வதற்கும் நாம் சாதி, மத பேதங்களைக் கடந்து ஐக்கியத்துடன் பயணிக்க வேண்டும்.

நாம் ஒன்றிணைவதன் மூலம் எம்மைப் பிரித்தாள முயற்சிக்கும்சக்திகளைத்தோல்வியடையச் செய்ய முடியும்.

ஆகவே எமது மக்கள் அனைவரும் மிகவும் விழிப்புடன் இருந்து சிறு சிறு பிணக்குகளில் முரண்பட்டு நிற்காது, சகிப்புத் தன்மையுடனும் விட்டுக்கொடுப்புடனும் பிரச்சினைகளை அணுகுவதற்கு முயற்சிக்க வேண்டும் – என்றுள்ளது. (ஐ)

## புலிக்கொடியுடன் இலங்கைத் தமிழர் ஹீத்ரோ விமான நிலையத்தில் கைது!

லண்டன் – ஹீத்ரோ விமான நிலையத்தில் இலங்கைத் தமிழர் ஒருவர் பயங்கரவாத எதிர்ப்புப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

36 வயதான வாகீசன் தங்கவேல் என்பவர் ஜெனீவாவுக்குச் செல்லவிருந்த நிலையில் ஹீத்ரோ விமான நிலையத்தில் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரிடம் இருந்து விடுதலைப் புலிகளின் இலட்சினை பொறிக்கப்பட்ட கொடி ஒன்றையும் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர் என ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வாகீசன் தங்கவேல் மற்றும் அவரின் நண்பர் ஒருவரும் பயங்கரவாதிகள் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, எர்ல்ஸ் கோர்ட்டில் அமைந்துள்ள பயங்கரவாத எதிர்ப்புத் தலைமையகத்துக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து வாகீசன் வீட்டில் பொலிஸார் சோதனைகளை மேற்கொண்டுள்ளனர். இதன்போது அவரின் மடிக்கணினி உள்ளிட்ட சில ஆவணங்களைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

எனினும், இந்த நபர் நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார் எனப் பிரிட்டன் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வாகீசன் தங்கவேல் சுதந்திரத்துக்கான பறையின் குரல் என்னும் இசைக்குழுவின் உறுப்பினராக இருந்து வருகின்றார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலின் 40ஆவது கூட்டத்தொடர் தற்போது ஜெனீவாவில் இடம்பெற்று வரும் நிலையில், கவுன்ஸிலுக்கு வெளியில் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபடுவதற்குச் சென்றபோதே வாகீசன் கைது செய்யப்பட்டுள்ளார் என அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)




## தன் நலம் துறந்த தவப்பயணம்

தவக் காலம் எமது வாழ்வை ஆன்மீகத்தில் புடமிடப்படும் காலமாகும். எமக்கு மட்டுமல்ல தன் சிலுவைப் பயணத்தை தொடரமுற்பட்ட இயேசுவுக்கும் பல சவால்கள் சாத்தானால் முன்வைக்கப்பட்டது. மனத்திடமுடன் சகல சவால்களையும் எதிர்கொண்டதை சிலுவைப் பாதை பயணத்தின் மூலம் வெற்றி கொண்டதை தவக் கால தியானங்கள் வழியில் நாமும் அறிந்து பயணிக்கின்றோம். இவை கற்பனை கதையல்ல வரலாற்று பதிவாக நாம் விசுவசிக்கிறோம்.

"அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கி, மானிடமகன் பல்வாறு துன்பப்படவும் மூப்பர்கள், தலைமைக்குருக்கள் மறைநூல் அறிஞர் ஆகியோரால் உதநித் தள்ளப்பட்டு கொலை செய்யப்படவும் மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்படவும் மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்படவும் வேண்டும்" என்று சொன்னார். தன்னோடு இருப்பவர்களாலும் ஒதுக்கப்படுவார் என முன்கூட்டியே அறிந்திருந்தும் கூட தான் மேற்கொண்ட சிலுவை பயணத்தை ஏற்றுக் கொண்டு முன்வென்றனர். இவைதான் எமது வாழ்விலும் எதிர்கொள்ள நேர்ந்தாலும் இறை பற்றுதியுடன் எமது ஆன்மீக பயணத்தை நம்பிக்கையுடன் முன்செல்ல விடுக்கும் அழைப்பாக ஏற்று சிலுவைப் பாதை பயணத்தை தொடர்வோம்.

" என்னை பின்பற்ற விரும்பும் எவரும் தன்நலம் துறந்து தன் சிலுவையை நாள்தோறும் தூக்கிக் கொண்டு என்னை பின்பற்றட்டும். ஏனெனில் தன் உயிரைக் காத்துக் கொள்ள விரும்பும் எவரும் அதை இழந்து விடுவார். என்பொருட்டு தம் உயிரை இழக்கும் எவரும் அதைக்காத்துக் கொள்வார்." என்ற நம்பிக்கை வரிகள் நாம் எந்த நிலையில் இருந்தாலும் இறைபற்றுதியில் நம்பிக்கையோடு தமக்கு ஏற்படும் துன்பதுயரங்களை கண்டு துவண்டு போகாது. தம் சுமைகளை இறை விசுவாசத்துடன் மனதை பலப்படுத்தும் ஆன்மீக வழியில் வெல்லும் செயல்களில் முன்னோக்கி நடக்க கிடைத்த சந்தர்ப்பமே இத் தவக்கால பயணமாக்குவோம். சலனங்கள், சபலங்களை களைந்து மனத்திடத்துடன் சிலுவைப் பயணத்தில் இணைவோம்.

- செ.யோசப்பாலா -

# கடல் வழியாக இந்தியாவுக்குள் அத்துமீறி நுழைந்து மீண்டும் மும்பைப் பாணியில் தாக்குதலுக்கு முஸ்தீபு

## பாரதக் கடற்படைத் தளபதி எச்சரிக்கை

மும்பையில் 2008 ஆம் ஆண்டு கடல்வழியாக வந்த லஷ்கர்–இ–தொய்பா தீவிரவாதிகள் பெரும் தாக்குதல் நடத்திய நிலையில், மீண்டும் இதுபோன்ற தாக்குதலை நடத்த அவர்கள் திட்டமிட்டு வருகின்றனர் என இந்தியக் கடற்படை தளபதி லம்பா எச்சரித்துள்ளார்.

புல்வாமா தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் இந்திய மிராஜ் 2000 போர்விமானங்கள் பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள தீவிரவாத முகாம்கள் மீது தாக்குதல் நடத்தின. 12 விமானங்கள், சுமார் 1000 கிலோ வெடிகுண்டுகளைத் தீவிரவாத முகாம்கள் மீது வீசி, அவற்றை முற்றிலுமாக அழித்தன.

இதைத் தொடர்ந்து இந்திய பகுதிக்குள் பாகிஸ்தான் விமானங்கள் அத்துமீறி நுழைந்தன. எதிர்தாக்குதல் நடத்தியபோது இந்திய விமானப்படை விமானி அபிநந்தன் பாகிஸ்தான் பகுதியில் சிக்கிக்கொண்டார். சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்புடன் அவர் இந்தியா திரும்பியுள்ளார்.

இந்த நிலையில் இந்திய பகுதிக்குள் மீண்டும் ஒரு பெரிய தாக்குதலை நடத்த பாகிஸ்தான் தீவிரவாதிகள் திட்டமிட்டு வருகின்றனர் என்ற தகவல் வெளியாகியுள்ளது. இந்தியக் கடற்படை தளபதி சுனில் லம்பா இதனைக் கூறியுள்ளார்.

இந்தோ – பசுபிக் பிராந்தியக் கூட்டத்தில் அவர் இது குறித்துப் பேசியவை வருமாறு:-

உலகின் பல நாடுகளும் தொடர்ந்து தீவிரவாத பாதிப்பை எதிர்கொண்டு வருகின்றன. பெரும் அச்சுறுத்தலாக விளங்கும் தீவிரவாத தாக்குதலை முடிவுக் கொண்டு வர அனைத்து நாடுகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். இதற்கான செயல் திட்டத்தை வகுக்க வேண்டும்.

சமீபத்தில் மிக மோசமான தாக்குதலை காஷ்மீரில் நாங்கள் சந்தித்தோம். இந்தியாவை சீர்குலைக்கத் திட்டமிட்டு வரும் தீவிரவாதிகளின் முயற்சி இது. ஆனால் இதுபோன்ற தாக்குதலை எதிர்கொள்ள இந்தியா எப்போதுமே தயாராக உள்ளது.

பாகிஸ்தான் ஆதரவுப் பயிற்சி பெற்ற தீவிரவாதிகள் பல்வேறு வழிகள் வழியாகவும் பெரிய அளவில் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளனர். குறிப்பாக கடல் வழியாக தாக்குதல் நடத்த பெரிய அளவில் திட்டமிடப்பட்டு இருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது. - என்றார் அவர்.



# உலகில் மாசு அதிகமான நகரங்களில் முதல் 20 இல் 15 இந்தியாவில்தானாம்

உலகிலேயே காற்று மாசு அதிகமாக உள்ள 20 நகரங்களில் 15 நகரங்கள் இந்தியாவிலேயே உள்ளன எனப் புதிய ஆய்வில் அதிர்ச்சித்தகவல் வெளியாகியுள்ளது, இதில் காஸியாபாத், பரிதாபாத், நொய்டா, பிவாடி ஆகியவை மாசடைந்த நகரங்களின் பட்டியலில் முதல் ஆறு இடங்களுக்குள் இடம்பெற்றுள்ளன.

கடந்த ஆண்டு உலகிலேயே மிகவும் மோசமான மாசடைந்த நகரமாக இந்தியாவின் தலைநகர் டெல்லி இருந்துள்ளதை புதிய தரவுகள் நிரூபித்துள்ளன.

சமீபத்திய தரவுகள் IQAir AirVisual 2018 World Air Quality Report என்ற அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளன. தெற்காசிய 'கிரீன்பீஸ்' அமைப்புடன் இணைந்து இந்த அறிக்கைத் தயாரிக் கப்பட்டுள்ளது.

உலகின் 20 மாசடைந்த நகரங்களில் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷில் மட்டும் 18 நகரங்கள் உள்ளன. ஆனாலும் இதில் 15 அதி மாசடைந்த நகரங்களைக் கொண்டுள்ளது இந்தியா. பரிதாபாத், பிவாடி, நொய்டா ஆகியவை முதல் ஆறு இடங்களுள் இடம்பெற்றுள்ளன. டெல்லி 11ஆவது இடத்தில் உள்ளது.

சீனாவின் தலைநகர் பெய்ஜிங் ஒரு காலத்தில் அதிமாசு நகரமாக இருந்தது. தற்போது இந்த அறிக்கையின் தரவுகளின் படி 122வது இடத்தில் உள்ளது.

மொத்தம் 3,000 நகரங்கள் அதி மாசுப்பட்டியலில் இருக்கின்றன. உலக சுகாதார அமைப்பு இந்த நகரங்களில் சுகாதார அவசரநிலை இருந்து வருவ தாக எச்சரித்துள்ளது.

தொழிற்சாலைகள், வீடுகள், கார்கள், ட்ரக்குகள் ஆகியவை சிக்கலான, கலவையான மாசுகளை வெளியேற்றி வருகின்றன. இவை அனைத்தும் உடல்நலத்துக்கு தீங்கு விளைவிப்பவை. இதில் மனிட உடல் நலத்துக்கு கடும் தீங்கு விளைவிக்கும் நுண்துகள் வஸ்துகளும் அடங்குகின்றன என்று இந்த அறிக்கை எச்சரிக்கிறது.

எரிபொருள் பயன்பாடுதான் பிரதான காரணம். வாகனங்கள், மின் ஆலைகள், தொழிற்சாலைகள், வீடுகள், வேளாண் மற்றும் பயோமாஸ் எரிப்பு ஆகியவை நகரங்களின் மாசுக்கு அதிகாரணமாக விளங்குகின்றன.

அரசியல் அறிக்கைகள் விடாமல் சுத்தமான காற்றுக்கு அரசாங்கங்கள் சீரிய திட்டமிடல் செய்ய வேண்டியுள்ளது என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கூறு கின்றனர்.

கிரீன்பீஸ் இந்தியா அமைப்பின் சமூக செயல்பாட்டாளர் புஜாரினி சென், கண்ணுக்குத் தெரியாத இந்தக் கொலைகார மாசு சக்தியை குறைக்க அரசுகள் செயல்படுவது அவசியம் என்பதை இந்த அறிக்கை அறிவுறுத்துகிறது நாம் சுத்த மான காற்றைச் சுவாசிக்க வேண்டுமெனில் நடவடிக்கைகள் ஆக்ரோஷமாகவும் அர்ப்பணிப்புடனும் இருக்க வேண்டும், வெறும் அரசியல் முத்துதிர்ப்புகள் போதா – என்றார்.

இன்னொரு சுற்றுசூழல் ஆர்வலரும் 'மை ரைட் டு பிரீத்' விழிப்புணர்வு பிரசாகருமான ரவீணா கோலி, நாட்டில் பொதுச் சுகாதாரத்துக்கு முக்கியத்துவம் அளிக்கும் அரசியல் உறுதிப்பாடு கொஞ்சம் கூட இல்லை, சுகாதாரப் பிரச்சினைகள் வரலாற்று ரீதியாக வாக்குகளாக மாறா என்பதால் அரசியவாதிகள் பட்ஜெட்டில் அதற்குக் குறைவான நிதியையே ஒதுக்குகின்றனர். இதனால் குடிமக்கள் வாழ்க்கையுடன் ஆட்சி அதிகாரமும், அரசியல்வாதிகளும் சமரசம் செய்துவிடுகின்றனர். உண்மையான தலைவர்கள் ஆட்சியில் இருந்தால் அரசியல் ஆதாயங்களை விட மனித உயிர்களுக்கு மதிப்பு இருக்கும் – என்று வேதனை தெரிவித்துள்ளார்.

(உ)

# சட்டவிரோதத் திருமணத்துக்கு மறுத்த மகளுக்கு விஷம் வைத்தனர் பெற்றோர்

## தருமபுரியில் பரபரப்புச் சம்பவம்

உரிய வயது வருவதற்கு முன்னரே 16 வயதில் சட்ட விரோத திருமணம் செய்து வைக்கும் பெற்றோரின் முயற்சிக்கு மறுப்பு தெரிவித்த சிறுமிக்கு பெற்றோரே உணவில் விஷம் வைத்தனர் என எழுந்துள்ள முறைப்பாடு தருமபுரியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



தருமபுரி அருகே திருமணத்துக்கு உடன்படாத பள்ளி மாணவிக்கு விஷம் கலந்த உணவு கொடுத்தனர் என்ற குற்றச்சாட்டில் பெற்றோரைப் பொலிஸார் கைது செய்தனர்.

அரசுப் பள்ளியில் படித்துவரும் 16 வயது மாணவிக்கு அவரது பெற்றோர் திருமணம் ஏற்பாடு செய்துள்ளனர், அதற்கு மாணவி கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். இதனையடுத்து ஆத்திரம் அடைந்த பெற்றோர் மதிய உணவில் விஷம் கலந்த உணவை கொடுத்தனர் என்று முறைப்பாடு எழுந்தது.

இதனைக் கண்டுபிடித்துவிட்ட சிறுமி மகேந்திர மங்கலம் காவல்நிலையத்துக்குச் சென்று தைரியமாகப் பெற்றோர் மீது முறைப்பாடு அளித்தார்.

விசாரணையில் உணவில் விஷம் கலக்கப்பட்டது உறுதி செய்யப்பட்டதையடுத்து காவல்துறையினர் பெற்றோரை கைது செய்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் அப்பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# பாக். ஆளில்லா ஊடுருவல் விமானத்தை சுட்டு வீழ்த்தியதாக இந்தியா அறிவிப்பு

ராஜஸ்தான், பிகானரில் சர்வதேச எல்லை அருகே பறந்த பாகிஸ்தானைச் சேர்ந்த ஆளில்லா விமானத்தை இந்திய விமானப்படை சுட்டு வீழ்த்தியது.

இது குறித்து இந்தியப் பாதுகாப்புத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு:-

திங்கள் காலை 11.30 மணியளவில் விமான ஊடுருவலைக் கண்டுபிடித்தோம். உடனடியாக Su-30MKIs (போர்விமானம்) வானில் எழும்பியது. இதனையடுத்து பாகிஸ்தானைச் சேர்ந்த ஆளில்லாப் போர்விமானம் ஏவுகணையினால் சுட்டு வீழ்த்தப்பட்டது. – என்று கூறப்பட்டுள்ளது.

ஆளில்லா விமானம் சர்வதேச எல்லையின் இன்னொரு புறத்தில் போய் விழுந்தது.

இந்தியா, பாகிஸ்தான் இருநாடுகளுமே ஆளில்லா விமானத்தை கண்காணிப்பு நோக்கங்களுக்காக எல்லைப்பகுதியில் பயன்படுத்தி வருகின்றன.

கடந்த செவ்வாயன்று பாகிஸ்தான் ஆக்ரமிப்பு காஷ்மீரில் உள்ள பாலகோட்டில் இந்திய ராணுவத்தினர் தீவிரவாத முகாம்கள் மீது தாக்குதல் நடத்தினர். அதன் பிறகே இந்திய விமானப்படை உச்சப்பட்ச எச்சரிக்கையில் பணியாற்றி வருகிறது.

இந்நிலையில் நேற்று முன்தினம் தரையில் உள்ள ராடார் சாதனம் பாகிஸ்தான் ஆளில்லா போர்விமானம் இந்தியப் பகுதிக்குள் ஊடுருவியதைக் கண்டுபிடித்தது. பிறகு சுகாய் – 30 ரக ஜெட் ஒன்று வான்வெளியில் கண்காணிப்புச் செய்து கொண்டிருந்த போது ஊடுருவல் பாகிஸ்தான் விமானத்தைச் சுட்டு வீழ்த்தியது.

கடந்த 6 நாட்களில் 2ஆவது முறையாக இந்திய எல்லைக்குள் ஆளில்லா விமானத்தை அனுப்ப முயன்று தோல்வி அடைந்தது பாகிஸ்தான்.

கடந்த 27 ஆம் திகதியும் கட்சில் பகுதியில் இது போன்றதொரு முயற்சி முறியடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. – இவ்வாறு இந்தியத் தரப்பில் மேலும் கூறப்பட்டது.

(உ)


சுகாய் – 30 சூப்பர்சானிக் ஜெட்

# மசூத் அஸாரின் மகன், சகோதரரை கைது செய்து காவலில் வைத்தது பாக்.

## தீவிரவாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் கட்டாயம்

இஸ்லாமாபாத்,மார்ச்07

இந்தியாவுக்கு எதிரான முக்கிய தீவிரவாத அமைப்பின் தலைவரான மசூத் அஸாரின் சகோதரர் மற்றும் மகன் உள்பட 44 பேரை பாகிஸ்தான் கைது செய்துள்ளது என்று பாகிஸ்தான் உள்துறை அமைச்சக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவின் புல்வாமாவில் இடம் பெற்ற தீவிரவாதத் தாக்குதலை அடுத்து, பாகிஸ்தானுக்கு பயங்கரவாத விவகாரத்தில் கடும் சர்வதேச நெருக்கடி கொடுக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில் மசூத் அஸாரின் சகோதரர் முப்தி அப்துல் ராவுஃப், மசூத் அஸாரின் மகன் ஹமத் அஸார் உள்பட 44 பேரை பாகிஸ்தான் கைது செய்துள்ளது என அந்நாட்டு உள்துறை அமைச்சர் ஹெர்யார் கான் அப்ரீடி கூறியுள்ளார்.

இது குறித்து பாகிஸ்தான் உள்துறை அமைச்சக அறிக்கையில் -

தேசிய நடவடிக்கைத் திட்டத்தை செயல்படுத்த மார்ச் 4 ஆம் திகதி உள்துறை அமைச்சகத்தின் கூட்டம் நடைபெற்றது. இதனை அனைத்து மாகாண அரசுகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர், இதில் தடைசெய்யப்பட்ட அமைப்புகளின் மீதான நடவடிக்கையைத் துரிதப்படுத்த முடிவெடுக்கப்பட்டது. இதனையடுத்து தடைசெய்யப்பட்ட அமைப்புகளின், கண்காணிப்பில் இருக்கும் 44 பேர் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இதில் மசூத் அஸாரின் சகோதரர் முப்தி அப்துல் ராவுஃப், மசூத் அஸார் மகன் ஹமாத் அஸார் ஆகியோரும் அடங்குவர். விசாரணைக்காக இவர்கள் காவலில் எடுக்கப்பட்டுள்ளனர். தேசப் பாதுகாப்பு கமிட்டியின் முடிவுகளின்படியே இத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.



மசூத் அஸாரைக் கைது செய்வது பற்றியும் அடுத்த 24 மணி நேரத்தில் பிரதமர் இம்ரான் கான் முடிவெடுப்பார் என்று அஜாஜ் சையத் என்ற எழுத்தாளர் கூறினார்.

இது நடக்குமா என்று கூற முடியாவிட்டாலும் இம்முறை பாகிஸ்தான் தங்கள் மண்ணிலிருந்து செயல்படும் தீவிரவாத அமைப்புகள் மீது கடும் நடவடிக்கை எடுத்தாக வேண்டிய கட்டாயம் உள்ளது என்று நிபுணர்கள் சிலர் தெரிவித்தனர்.

மூத்த பத்திரிகையாளர் காஷிப் அப்பாஸி கூறும்போது -

பாகிஸ்தானின் மூத்த சிவில் மற்றும் இராணுவத் தலைமைகளிடம் தான் உரையாடிய வரையில் தீவிரவாத அமைப்புகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயத்தை அவர்கள் உணர்ந்துள்ளனர். நிதி நடவடிக்கைப் பணிக்குழுவின் பன்னாட்டு நெருக்கடிகளினால் பாகிஸ்தான் தன் சொந்த மண்ணிலிருந்து இந்த அமைப்புகள் இயங்குகின்றமையை அனுமதிக்க முடியாது. - என்றார்.

# ஆஸியில் இந்திய வம்சாவளி பெண் டாக்டர் கார் டிக்கியில் சூட்கேஸில் சடலமாக மீட்பு!



ஆஸ்திரேலியாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமையிலிருந்து மாயமான இந்திய வம்சாவளி பெண் டாக்டர் சூட்கேஸில் அடைத்து வைக்கப்பட்ட நிலையில் சடலமாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்திய வம்சாவளி பெண் பிரீத்தி ரெட்டி (வயது. 32) ஆஸ்திரேலியாவில் பல் மருத்துவராகப் பணிபுரிந்து வருகிறார். இவர் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று சிட்னியில் நடைபெற்ற மருத்துவ மாநாட்டில் பங்கேற்றுள்ளார். ஆனால் அன்றைய தினம் இரவு அவர் வீடு திரும்பாதமையால் சந்தேகமடைந்த அவருடைய தங்கை நித்யா பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

அதன் அடிப்படையில் ப்ரீத்தியின் முன்னாள் காதலனிடம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். அப்போது, மாநாடு முடிந்த பின்னர் ப்ரீத்தி முன்னாள் காதலனுடன் ஹோட்டலில் அறையெடுத்துத் தங்கியிருந்தமை தெரிய வந்தது. அதோடு அல்லாமல் அவருடைய முன்னாள் காதலனும் ஒரு பல் மருத்துவர் என்பதும், அவரும் மாநாட்டில் கலந்து கொண்டார் என்பதும் தெரிய வந்தது.

இந்த விசாரணை முடிந்த அடுத்த சில மணி நேரங்களிலே, சிட்னியில் இருந்து 4 மணி நேரப் பயணமாக இங்கிலாந்து நெடுஞ்சாலையில் காரில் சென்று கொண்டிருந்த அந்த இளைஞர், திடீரென எதிரில் வந்த காரில் மோதி விபத்தில் சிக்கி இறந்துள்ளார்.

இதனால் பொலிஸாருக்குச் சந்தேகம் வலுக்க ஆரம்பித்தது. உடனே அவர் தங்கியிருந்த பகுதியில் இருந்த சி.சி.ரி.வி. காட்சிகளை ஆய்வு செய்த போது, காதலனுடன் அறைக்குச் செல்வதற்கு முன்பு ப்ரீத்தி அங்கிருந்த ஒரு கடைக்கு சென்று வந்தமை பதிவாகியிருந்தது.

தேடுதல் வேட்டையைத் தீவிரப்படுத்திய பொலிஸார் ப்ரீத்தியின் கார் கிங்ஸ்போர்ட் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதைக் கேள்விப்பட்டு வேகமாக விரைந்தனர்.


அங்கு காரின் பின்பகுதியை திறந்த பொழுது ஒரு சூட்கேஸ் இருந்துள்ளது. அதனுள் இருந்த ப்ரீத்தியின் உடலில் பல முறை கத்தியால் குத்தப்பட்டதற்கான தடயங்கள் இருந்தன. இந்த நிலையில் அவருடைய உடலைக் கைப்பற்றியுள்ள பொலிஸார் பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அதனை அனுப்பி வைத்தனர். மேலும் கொலைக்கான காரணம் குறித்து அவர்கள் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# அமெ. ஜனாதிபதித் தேர்தலில் ஹிலாரி போட்டியிடமாட்டார் என்று அறிவிப்பு

2020 அமெரிக்க அதிபர் தேர்தலில் தான் போட்டியிடவில்லை என்று முன்னாள் அதிபர் வேட்பாளர் ஹிலாரி கிளிண்டன் அறிவித்துள்ளார்.

1947ஆம் ஆண்டு பிறந்த ஹிலாரி கிளிண்டன், அமெரிக்க அரசியலில் பிரபலமானவர். ஐக்கிய அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் மற்றும் அமெரிக்க செனட் சபை உறுப்பினராகவும் இவர் இருந்துள்ளார்.

அமெரிக்க வரலாற்றில், ஒரு பெரிய அரசியல் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக தேர்வான முதல் பெண்மணி இவரே. கடந்த 2016ஆம் ஆண்டு குடியரசுக் கட்சியின் அதிபர் வேட்பாளரான ட்ரம்ப்பை எதிர்த்துப் போட்டியிட்டார். தேர்தல் கணிப்புகள் ஹிலாரியின் பக்கம் இருந்தாலும் முடிவுகள் அவருக்கு எதிராக இருந்தன. தேர்தலில் தோற்றாலும் தொடர்ந்து மக்களுக்காக உழைப்பேன் என்று அறிவித்தார் ஹிலாரி. அடுத்த ஆண்டு தேர்தலுக்காக அமெரிக்கா தயாராகி வரும் நிலையில் அத்தேர்தலில் தாம் போட்டியிடப் போவதில்லை என அவர் அறிவித்துள்ளார்.



சர்ச்சைக்கருத்துக்காக நீக்கப்பட்ட அமைச்சர் ஃபயாஸுல் சோஹறான்.

# இந்துக்களையும் மோடியையும் மோசமாக விமர்சித்த மாகாண அமைச்சருக்குக் கல்தா கொடுத்தார் இம்ரான்



இந்துக்களைக் குறிவைத்து, 'பசுவின் சிறுநீரைக் குடிப்பவர்கள்' என்று கிண்டலடித்த - தனது கட்சியைச் சேர்ந்த - மாகாண அமைச்சர் ஒருவரை அமைச்சுப் பதவியிலிருந்து கல்தா கொடுக்க வைத்திருக்கின்றார் பாகிஸ்தானின் பிரதமர் இம்ரான் கான்.

பாகிஸ்தானின் ஆளும் பாகிஸ்தான் மக்கள் கட்சியின் பஞ்சாப் மாகாணத் தகவல் மற்றும் பண்பாட்டு அமைச்சர் ஃபயாசுல் ஹசன் சோஹறான் இந்துமதம், இந்தியப் பிரதமர் மோடி மற்றும் இந்திய இராணுவம் பற்றிய வெறுப்புணர்வைத் தூண்டும் கருத்துக்களைக் கூறிவந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. அதற்காக அமைச்சர் பதவியிலிருந்து அவரை நீக்கி இம்ரான் கான் அதிரடி நடவடிக்கை மேற்கொண்டார்.

'இப்படிப்பட்ட முட்டாள்தனமான பேச்சுகளை பொறுத்துக் கொள்ள முடியாது' - என இம்ரான் கான் தெரிவித்தார்.

இவரது கருத்துக்களை மிகவும் பொறுப்புடன் அணுகிய இம்ரான் கான் பஞ்சாப் முதல்வர் உஸ்மான் புஸ்தாருக்கு அறிவுறுத்தி ஃபயாஸுல் ஹசன் சோஹறானை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கச்செய்தார்.

இது தொடர்பாக பாகிஸ்தான் மக்கள் கட்சி தன் ட்விட்டரில், இன்னொருவர் நம்பிக்கையைப் புண்படுத்துவது எந்த ஒரு கதையாடலின் அங்கமும் கிடையாது. சகிப்புத்தன்மை என்ற அடிக்கட்டுமானத்தில் மேல்தான் பாகிஸ்தான் என்ற நாடு கட்டமைக்கப்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளது.


முதல்வர் புஸ்தார், ஃபயாஸுல் சோஹறான் மன்னிப்பை ஏற்றுக் கொண்டுள்ளார், ஆனால் பிரதமர் இம்ரான் உடனடியாக அவரை அமைச்சர் பதவியிலிருந்து நீக்குமாறு உத்தரவிட்டார்.

மேலும் கட்சியின் மூத்த உறுப்பினர்கள், மனித உரிமை அமைச்சர்கள் ஃபயாசுல் பேச்சுக்குக் கடும் கண்டனங்களை எழுப்பியமையும் குறிப்பிடத்தக்கது.

" நான் பிரதமர் மோடியையும் இந்திய இராணுவத்தையும்தான் விமர்சித்தேன், இந்துக்களை அல்ல. இந்து சமூகத்தினரை அது புண்படுத்தியிருந்தால் நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன், என் கருத்து பாகிஸ்தான் வாழ் இந்து மக்களுக்கு எதிரானது அல்ல" என்றார்.

கடந்த மாதம் இந்துக்களை குறிவைத்து, 'பசு சிறுநீரைக் குடிப்பவர்கள்' என்று கிண்டலடித்திருந்தார் ஃபயாசுல் சோஹறான். மேலும், "நாங்கள் முஸ்லிம்கள் எங்களுக்கு ஒரு கொடி உள்ளது, மவுலா அலியாவின் தீரத்தின் கொடி, ஹஸ்ரத் உமராவின் வீரக்கொடி, உங்களிடம் இது போன்ற கொடி உள்ளதா? எங்களை விட 7 மடங்கு நீங்கள் சிறந்தவர்கள் என்ற எண்ணம் வேண்டாம். எங்களிடம் உள்ள எதுவும் உங்களிடம் இல்லை. நீங்கல் சிலைகளை வணங்குபவர்கள்" - என்று பேசிய வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலானது.

இதனையடுத்து இம்ரான் கான் கட்சி இதனை முட்டாள்தனமானது, ஏற்க முடியாது என்று கண்டித்து அந்த அமைச்சரை ராஜினாமா செய்ய வலியுறுத்திய நிலையில் அவர் விடுத்த பகிரங்க மன்னிப்பு வேண்டுகோளையும் மீறி அவர் பதவி பறிக்கப்பட்டுள்ளது.




# அனைத்து அடக்குமுறைகளுக்கும் எதிராக பெண்களே அணி திரளுங்கள்!

ஆண்டுதோறும் மார்ச் 8 சர்வதேச மகளிர் தினமாக முன்னெடுக்கப்படுகின்றது. 1975 ஆம் ஆண்டிலிருந்து ஐக்கிய நாடுகள் சபை இந்த தினத்தை சர்வதேச பெண்கள் தினமாக அறிவித்திருந்த போதும், வரலாற்றில் இந்நாள் 1917 ஆம் ஆண்டு சுமார் இரண்டு லட்சம் ரஷ்யப் பெண்கள் ஜார் மன்னரின் கொடுங்கோல் ஆட்சிக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த நிகழ்வை நினைவு கூரும் நாளாகும். ஜார் ஆட்சிக்காலத்தில், முதலாம் உலகப்போரின் விளைவாகப் பல்லாயிரக்கணக்கான ரஷ்ய ஆண்கள் மடிந்தனர்; காணாமல் ஆக்கப்பட்டனர்; பஞ்சம் தலைவிரித்தாடியது. தமது கணவன்மாரைப் போருக்குப் பலி கொடுத்துவிட்டு, குழந்தைகள் பசியில் வாடுவதைப் பொறுக்க முடியாத பெண்கள் 'ரொட்டிக்காகவும், போருக்கு எதிராகவும்' என்ற தொனிப் பொருளை மையமாகக் கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். இப் பெண்கள் எழுச்சியின் தொடர்ச்சியாகவே மாபெரும் ரஷ்ய அக்டோபர் புரட்சி ஏற்பட்டது. அதற்கு நன்றி கூறும் விதமாக, லெனின் தலைமையிலான சோவியத் அரசு மார்ச் 8 ஆம் திகதியை மகளிர் தினமாக அறிவித்து ரஷ்யப் பெண்களை கௌரவித்தது.

**இன்றும் தொடரும் மகளிர் போராட்டம்**

இன்று பெண்கள் அனுபவிக்கும் மகப்பேற்று விடுமுறை, பாலூட்டும் தாய்மாருக்கான நேரச்சலுகை உட்படப் பல்வேறு உரிமைகள் ரஷ்ய சோலிசப் புரட்சி எமக்குப் பெற்றுத் தந்த உரிமைகளாகும். ஆனாலும், தமது பல்வேறு உரிமைகளுக்காக உலகெங்கிலுமுள்ள பல்வேறு நாடுகளிலும் பெண்கள் இன்றும் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

இலங்கையில் மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தமது நாள் சம்பளம் ஆயிரம் ரூபாவாக உயர்த்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையுடன் பல மாதங்களாக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்றனர். அதேபோல், யுத்தத்தில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை மீட்டுத் தரும்படி வடக்கு கிழக்கில் பெண்கள் போராடிக்கொண்டிருக்கின்றனர்.

அத்துடன், தமது பூர்வீக வாழ்விடங்களை மீட்டுத் தரும்படி கேப்பாபிலவு, சிலாவத்துறை மக்கள் தொடர்ந்தும் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

புத்தளம் பிரதேசத்தில் கொழும்பு, வெளிநாட்டுத் திண்மக் கழிவுகளை கொட்டும் திட்டத்திற்கு எதிராக மக்கள் போராடிக்கொண்டிருக்கின்றனர்.

இந்த எல்லா போராட்டங்களிலும் சளைக்காமல் ஓர்மத்துடன் தொடர்ந்து போராடிக் கொண்டிருப்பவர்கள் பெண்களே.

10 இலிருந்து 50 வயதுக்கு இடைப்பட்ட பெண்களையும் ஐயப்பன் கோயில் தரிசனத்திற்காக அனுமதிக்க வேண்டும் என இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய பின்னரும் கூட, வழிபாட்டுக்கு சென்ற பெண்களை பிற்போக்கு ஆணாதிக்க மதவாத சக்திகள் தடுத்ததுடன், அவர்களுக்கு எதிராகத் தாக்குதலும் நடத்தியது. இதற்கெதிராக, தமது வழிபாட்டு உரிமைக்காக, சுமார் 5 லட்சம் கேரளப் பெண்கள் திரண்டெழுந்து மனிதச் சங்கிலிப் போராட்டத்தை நடத்தித் தமது உரிமையைப் பெற்றுக் கொண்டனர்.

இந்த நிகழ்விலிருந்து புலனாவது என்ன? சட்டங்களாகக் காகிதங்களில் இருக்கும் பெண்களின் உரிமைகள் நடைமுறைக்கு வர வேண்டுமானால்கூட பெண்கள் போராட வேண்டியிருக்கிறது. பெண்கள் மீதான வன்முறைக்கு எதிராக பல்வேறு சட்டங்கள் வெறும் காகிதங்களில் மட்டுமே இருக்கின்றன. பல்கலைக் கழக விரிவுரையாளரான போதநாயகி, ஹற்றன் தனியார் வைத்தியசாலை தாதி சாந்தினி உட்படப் பல பெண்கள் குடும்பத்தில், வேலையிடத்தில் நிகழும் வன்முறைகள், அத்துமீறல்களால் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். குடும்ப உறுப்பினர்களால் பெண்களுக்கெதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகள் பல முறைப்பாடாகக் கூடப் பதிவாவதில்லை.

**இட்டைச் சுமை**

வருமானத்திற்கான உழைப்பிலும் குடும்பத்திற்கான உழைப்பிலுமாக பெண்கள் இரட்டைச் சுமைக்கு உட்படுத்தப்படுகின்றனர். அதுபற்றி முதலாளித்துவ சட்டங்கள் கண்டுகொள்வதில்லை. அதைப் பற்றிப் பேசினால், முதலாளித்துவ பொருளாதார அமைப்பின் இருப்பிற்கு அச்சுறுத்தலாகும் என்பதால், பெண்விடுதலை என்பதாக மேட்டுக்குடிப் பெண்களின் பார்வையில், அவர்களின் கோரிக்கைகளை மட்டும் முன்னிறுத்தி, உழைக்கும் பெண்களின் கோரிக்கைகளைப் புறந்தள்ளிவிடுகின்றனர்.

உண்மையில் உழைக்கும் பெண்களின் விடுதலை சமூக விடுதலையுடன் இணைந்திருந்திருக்கிறது. உழைக்காத பெண்கள் என எவருமே இல்லை. சில பெண்களிற்கு உழைப்பிற்கான ஊதியம் கிடைக்கிறது. அவர்களின் உழைப்பிற்குப் பணப் பெறுமதி இருக்கிறது. பணப்பெறுமதியற்ற குடும்ப உழைப்பில் பெண்களின் ஆயுளும் ஆரோக்கியமும் தேய்ந்து மடிந்து போவதை எவரும் கண்டுகொள்வதில்லை.

1990 களில் வெனிசூலா நாட்டின் இல்லத்தரசிகள், தமது குடும்ப உழைப்பையும் சமூக உழைப்பாக கருதித் தமக்கும் ஓய்வூதியம் வழங்கவேண்டும் என்ற கோரிக்கையுடன் வேலைநிறுத்தப் போராட்டம் நடத்தி வெற்றி கண்டனர்.

குடும்ப உழைப்பில் 8 மணி நேரம் என்ற நேர வரையறை இல்லை. காலை கண்விழித்ததிலிருந்து உறங்கச் செல்லும் வரை ஓய்வற்ற உழைப்பில் பெண்கள் சலிப்பின்றி உழைப்பது பற்றி எந்தக் கவலையும் யாருக்கும் இல்லை.

பெண்கள் பல பணியிடங்களில் ஆண்களுக்கு நிகரான சம்பளம் வழங்கப்படாமல் சுரண்டப்படுகின்றனர். பாலியல் வசவுகள், பாலியல் அத்துமீறல்கள் எனப் பணியிடங்களில் பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகின்றனர். இவற்றிற்கு எதிர்ப்புத் தெரிவித்துக் குரல் உயர்த்துபவர்கள் தனிப்பட்ட பழிவாங்கல்கள் மூலம் அச்சுறுத்தப்படுகின்றனர். அதற்குப் பயந்து பல்வேறு வன்முறைகள் வெளித் தெரியாமல் அமுக்கி வைக்கப்படுகின்றன.

இலங்கையில் யுத்தத்தின் காரணமாகச் சுமார் 80 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண் தலைமையேற்ற குடும்பங்கள் உருவாக நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன. இத்தகைய தலைமை தாங்கும் பெண்கள் நிரந்தர வேலை இன்மை, வறுமை காரணமாகப் பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகியிருக்கின்றனர். இந்தவாய்ப்பைப் பயன்படுத்தி நுண்கடன் நிறுவனங்கள் பெண்களை மேலும் சுரண்டுகின்றனர். நுண்கடன் நிறுவனங்களின் அத்துமீறல்களால் பல பெண்கள் தற்கொலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர்.

**சட்டத்தின் மூலம் பெற்றவை சொற்பமே**

உலகெங்கிலுமுள்ள பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்குச் சட்டத்தின் மூலம் பெற்றுக்கொண்ட தீர்வுகள் சொற்பமே. இதுவரை பெற்றுக்கொள்ளப்பட்ட தீர்வுகள் யாவும் பெண்களின் ஓர்மமான, விடாப்பிடியான போராட்டங்களின் மூலமே பெற்றுக்கொள்ளப்பட்டன.

பெண்கள் அமைப்பாவதும், அவ் அமைப்புக்குள் தமது அனுபவங்களை, துன்பங்களை பகிர்ந்து கொள்வதன் மூலம் தீர்வுகளை தேட முயற்சிப்பதுமே எமக்கான விடுதலைக்கான திறவுகோலாகும். நீங்கள் நடக்கத் தொடங்கும் வரை, உங்கள் கால்கள் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருப்பது உங்களுக்கே தெரியாது என்ற ரோசா லக்சம்பர்க் கூற்றின் படி, எமது விடுதலைக்காக எமது கால்கள் நகரும் போதுதான், எம்மைப் பிணைத்துள்ள அடிமைச் சங்கிலிகளை நாம் உணரத் தொடங்குவோம். அவ்வாறு உணரத் தொடங்கும் போது, எம்மைச் சரியான திசையில் வழிநடத்த, அமைப்பாக அணி திரள்வதுதான் பெண்களின் இன்றைய அடிப்படைத் தேவையாகும். பெண்களை அடக்குமுறைகளுக்குள் கட்டுப்பட்டு நிற்கும், தனித்தனித் தீவுகளாக வைத்திருக்கும் வரை நமக்கு விடுதலை என்பது எட்டாக் கனியே.

**கட்டமைப்பாக இயங்குவது அவசியம்**

திருமணமானபின் தமது உணர்வுகளை வெளிப்படையாகப் பகிர்ந்துகொள்ளக்கூட தோழிகளின்றி, மனவுளைச்சலுக்கு ஆளாகியிருக்கும் பெண்கள் அநேகர். வெளிப்படையாகப் பேசிக்கொள்ள யாருமின்றி இருப்பது துன்பம். இதைக் களையப் பெண்கள் முன்வர வேண்டும். தம்மை அமைப்பாக்கிக் கொண்டு, தமக்கு எதிரான குடும்ப், சமூக, அரச வன்முறைகளை இனங்கண்டு களைய, போராட அணிதிரளவேண்டும்.

பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பானது பெண்கள் மீதான அனைத்து வன்முறைகளுக்கும் எதிராக அமைப்பாக்கம் பெற்றுப் போராட உங்களை அழைக்கிறது. 'சும்மா கிடைக்க சுதந்திரம் என்பது சுக்கா மிளகா கிளியே' என்ற பாரதிதாசனின் கேள்விக்கேற்ப எமக்கான விடுதலையை நாம் சும்மா பெற்றுவிட முடியாது. இதுவரை பெறப்பட்ட அனைத்து உரிமைகளும் யாரோ போராடி எமக்கு வாங்கித் தந்தவைகளே. எமக்கும் எமது அடுத்த சந்ததிக்குமாக விடுதலைக்கான போராட்டத்தை நாம் முன்னெடுக்க வேண்டும். அமைப்பாக்கம் பெற்ற போராட்டங்களை முன்னெடுப்போம்! விடுதலைக்கான கதவுகளைத் திறப்போம்!

## நாளைய மகளிர் தினத்தை ஒட்டி பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பு அழைப்பு



## சதொச விற்பனை நிலையத்துக்கு அமைச்சர் ரிஷாத் திடீர்ப் பயணம்



வவுனியா, மார்ச் 07

வவுனியா, நெளுக்குளம் பகுதியில் உள்ள சதொச விற்பனை நிலையத்தின் செயற்பாடுகளை வர்த்தக கைத்தொழில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் நேற்றுப் பார்வையிட்டார்.

இதன்போது பொருள்களின்தரம், பொருள்களின் விலைகள் என்பவற்றைப் பரிசீலித்தமையுடன் சதொசவின் செயற்பாடுகள் தொடர்பாகவும் அங்கு கடமையாற்றுபவர்களுடன் கலந்துரையாடினார்.

அமைச்சருடன் இணைப்பாளர் முத்து முகமது, நகரசபை உறுப்பினர்களான அப்துல் பாரி, லரீவ் உள்ளிட்டோரும் உடன் சென்றிருந்தனர். (ஐ - 100)

## கைவிரித்தது ஐக்கிய தேசியக் கட்சி சீற்றத்தில் முற்போக்குக் கூட்டணி!

கொழும்பு, மார்ச் 07

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு கோரிக்கை குறித்து நேற்று நடைபெற்ற ஆளுங்கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலும் ஐக்கிய தேசியக் கட்சி அக்கறை காட்டவில்லை என தெரியவருகின்றது.

ஆளும் ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்றக்குழுக் கூட்டம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன் தினம் இரவு அலரி மாளிகையில் நடைபெற்றது.

இதன்போது 2019 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுகள் சம்பந்தமாக ஆராயப்பட்டுள்ளன.

அவ்வேளையில், பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு பாதீட்டின் ஊடாக வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்ட 50 ரூபா கொடுப்பனவு குறித்து சமர்ப்பிக்கப்பட்டுள்ள பாதீட்டில் எதுவும் இல்லை.

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் முழுமையாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். இது பெரும் அநீதியாகும். என வேலுகுமார் எம்.பி. சுட்டிக்காட்டியுள்ளார் என அறியமுடிகின்றது.

இதற்கு பதிலளித்துள்ள நிதி அமைச்சர், இது தனியார் கம்பனிகளுடன் சம்பந்தப்பட்ட விடயமாகும். எனவே, பொறுமையாகத்தான் தீர்மானம் எடுக்கப்படவேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

நிதி அமைச்சரின்கருத்துக்கு பதிலளித்த வேலுகுமார் எம்.பிக்கு வாய்ப்பளிக்கப்படவில்லை என்றும், பிரதமர் கூட பொறுப்பற்ற விதத்திலேயே பதில் வழங்கியுள்ளார் என்றும் அலரிமாளிகைத் தகவல்கள் தெரிவிக்கின்றது.

அமைச்சர்களான மனோ கணேசன், பழனி திகாம்பரம் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை.

பெருந்தோட்டத்தொழிலாளர்களுக்கு பட்ஜெட் ஊடாக 140 ரூபா கொடுப்பனவு வழங்கப்படாவிட்டால் அரசிலிருந்து வெளியேறுவோம் என தமிழ் முற்போக்கு கூட்டணி ஆரம்பத்தில் அறிவித்திருந்தது.

பிரதமர் மற்றும் பெருந்தோட்டக்கைத்தொழில் அமைச்சருடன் நடைபெற்ற சந்திப்பையடுத்து பட்ஜெட் ஊடாக 50 ரூபா கொடுப்பனவே வழங்கப்படும் என்ற அறிவிப்பு விடுக்கப்பட்டிருந்தது.

எனினும், நேற்றுமுன்தினம் சமர்ப்பிக்கப்பட்ட பட்ஜெட்டில் அந்த முன்மொழிவுகூட உள்ளடக்கப்படவில்லை.

## மஹிந்த ராஜபக்ஷவை ஓரம் கட்டியது நோர்வே

### கூட்டு எதிரணி கடும் சீற்றம்

கொழும்பு, மார்ச் 07

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள நோர்வேயின் வெளிவிவகார இராஜாங்கச் செயலர் மரியன் ஹகென் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்திக்காதமை கூட்டு எதிரணியினருக்குக் கடும் சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல,

இலங்கை வந்துள்ள நோர்வேயின் வெளிவிவகார இராஜாங்கச் செயலர் மரியன் ஹகெனுடனான சந்திப்புக்கு, எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவை கொழும்பில் உள்ள நோர்வே தூதரகம் அழைக்கவில்லை.

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனுடன் நிச்சயமாக ஒரு சந்திப்புக்கு நோர்வே தூதரகம் ஏற்பாடு செய்யும் என்று தெரிவித்துள்ளார். (ஐ)

## தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் வீட்டுத்திட்ட அடிக்கல் நடும் நிகழ்வு




கோப்பாய் பிரதேச செயலர் பிரிவின் இருபாலை தெற்கு கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட ஆனந்தபுரம், ஞானவைரவர் கோயிலடி கிராமங்களில் கோப்பாய் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் தேசிய வீடமைப்பு அதிகாரசபையினரால் முதல் கட்டமாக 81 நிரந்தர வீடுகள் அமைப்பதற்காக அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கோப்பாய் பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் இ.திலீபன்,தேசிய வீடமைப்பு அதிகார சபை கணக்காளர் திரு.க.சுகுமார்,வலிகிழக்குப் பிரதேச சபை உறுப்பினர்கள் நடேசபிள்ளை கஜேந்திரகுமார், இ.மயில்வாகனம், ச.நகுலேஸ்வரி, சி.சிந்துஜா, கிராமசேவையாளர் இ.ஜெயகரன்,பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.மாதவன்,தேசிய வீடமைப்பு அதிகார சபையின் கோப்பாய் பிரதேச தொழில்நுட்ப உத்தியோகத்தர் சி.லக்ஸ்மன் மற்றும் தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் அ.கோவிந்தன்,க.செந்தூரன்,க.ஜெரோஷிகா ஆகியோர்களுடன் பிரதேச பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும்,பொது மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

# இந்து - கத்தோலிக்க முரண்பாடுகளை ஏற்படுத்தும் தீய சக்திகளின் முயற்சிக்கு இடமளிக்கவேண்டாம்

### முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் வலியுறுத்து



யாழ்ப்பாணம், மார்ச் 07

இந்து - கத்தோலிக்க முரண்பாடுகளை ஏற்படுத்தும் தீய சக்திகளின் செயற்பாடுகளுக்கு இடமளிக்க வேண்டாம் என்று வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச்செயலாளருமான நீதியரசர் சி.வீ. விக்னேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் நேற்' வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

மன்னார் திருக்கேதீஸ்வரம் பகுதியில் கடந்த 3 ஆம் திகதி இடம்பெற்ற சம்பவத்தைக் காரணமாக வைத்து அங்கு தமிழர் என்ற அடையாளத்துடன் அன்னியோன்யமாக வாழ்ந்துவரும் இந்துக்களுக்கும் கத்தோலிக்கர்களுக்கும் இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் விதத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் விஷமத்தனமான செயற்பாடுகள் குறித்து மக்கள் விழிப்பாக இருந்துகொள்ள வேண்டும்.

இந்து - கத்தோலிக்க பதற்றத்தைத் தூண்டும் வகையில் சில தீய சக்திகள் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன என நான் அறிகின்றேன். இதன் ஒரு அங்கமாக மன்னாரில் உள்ள கத்தோலிக்க குருமார்கள் மற்றும் மக்களை அச்சுறுத்தும் வகையில் துண்டறிக்கைகள் விநியோகிக்கப்பட்டுவருகின்றன என அறிந்து நான் மிகவும் கவலை கொண்டுள்ளேன்.

தமிழ் மக்களின் உரிமைகளுக்கான பல தசாப்தகாலப் போராட்டத்தின் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் இந்து - கத்தோலிக்க வேறுபாடு ஏற்பட்டது கிடையாது. எமது உரிமைகளுக்கான பல்வேறு வடிவங்களிலான போராட்டங்களில் கத்தோலிக்க மக்களும் கத்தோலிக்க மத குருமார்களும் மகத்தான பங்களிப்பை வழங்கியிருக்கின்றார்கள். மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் எமது மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களைச் சர்வதேச சமூகத்துக்குக் கொண்டுசென்று நீதி மற்றும் பொறுப்புக்கூறல் செயற்பாடுகளை ஏற்படுத்துவதற்கும் அளப்பரிய சேவையைக் கத்தோலிக்க மத குருமார்கள் செய்திருக்கின்றமை எம் எல்லோருக்கும் தெரியும்.

குறிப்பாக எனது மதிப்புக்குரிய மன்னார் மாவட்டத்தின் முன்னாள் பேராயர் இராயப்பு யோசப் ஆண்டகை , உயிர் ஆபத்துக்களையும் பொருட்படுத்தாமல் எமது அரசியல் உரிமைகளை வலியுறுத்தியும், மனித உரிமைகளை பாதுகாப்பதற்குமாக ஆற்றியுள்ள மகத்தான சேவையை இந்தச் சந்தர்ப்பதில் நினைவு கூருகின்றேன். அதேபோல, தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்குமான பணிகளில் ஈடுபட்டு 12 க்கும் அதிகமான பாதிரியார்கள் தமது உயிர்களைத் தியாகம் செய்திருக்கிறார்கள். பலர் காணாமல் போயிருக்கின்றார்கள்.

முள்ளிவாய்காலில் தமிழ் மக்களுக்கு எதிரான இன அழிப்பு மேற்கொள்ளப்பட்ட போது, கத்தோலிக்க மத குருமார்கள் மக்களின் பாதுகாவலர்களாகச் செயற்பட்டு தமது உயிர்களை இழந்திருக்கின்றார்கள்.

அதேபோல, தந்தை செல்வா எந்தவித மத வேறுபாடுகளும் இல்லாமல் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக இறுதிவரை அயராது உழைத்தார். அவரை தமது தலைவனாக ஏற்று தமிழ் மக்கள் பெரும் ஆதரவை வழங்கினார்கள்.

பின்னர் தம்பி பிரபாகரன் எமது உரிமைகளுக்காகப் போராடியபோது எந்த வித மத வேறுபாடுகளும் இன்றி ஒட்டு மொத்த தமிழ் மக்களும் அவர் பின்னே அணிதிரண்டு அளப்பெரும் தியாகங்களைச் செய்தார்கள்.

ஆகவே, எந்த ஒரு காரணத்தையும் முன்னிட்டு தமிழ் மக்கள் மத்தியில் இந்து - கத்தோலிக்க அடிப்படையில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் தீய சக்திகளின் செயற்பாடுகளுக்கு இடமளிக்கவேண்டாம் என்று தமிழ் மக்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன். இத்தகைய செயற்பாடுகள் தொடர்பில் மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும். எவரது தூண்டுதல்களுக்கும் ஆளாகி எந்த ஒரு முரண்பாட்டு நடவடிக்கைகளிலுந் தயவு செய்து ஈடுபடாதீர்கள். பொறுத்தார் பூமி ஆள்வார்கள். இது இந்துக்களுக்கும் பொருந்தும் கத்தோலிக்க மக்களுக்கும் பொருந்தும் என்பதை மறவாதீர்கள் - என்றுள்ளது. (ஐ)

# வடக்கின் பெரும் போர் இன்று ஆரம்பம்




யாழ்ப்பாணம், மார்ச் 07

மொபிட்டல் நிறுவனத்தின் அனுசரணையுடன் 'வடக்கின் போர்' என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான நூற்றாண்டு கால கிரிக்கெட் போட்டி இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகி 3 நாள்கள் நடைபெறுகின்றது.

113ஆவது இன்னிங்ஸ் போட்டியான இது இம்முறையும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறுகிறது. போட்டியின் பாதுகாப்பு இரண்டு கல்லூரிச் சமூகத்தாலும் பொலிஸாரிடம் வழங்கப்பட்டுள்ளது.

போதையில் அடாவடியில் ஈடுபடுவோர் தண்டிக்கப்படுவர் என கூறப்பட்டுள்ளது.

மதுபோதை அல்லது போதைப் பொருள்கள் பாவனையுள்ள எவரும் போட்டியைப் பார்க்க அரங்குக்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

இரு கல்லூரி மாணவர்களும் சீருடையுடன் மட்டுமே மைதானத்துக்குள் அனுமதிக்கப்படுவர். பழைய மாணவர்களும் நலன்விரும்பிகளும் இருப்பிட வசதி கொண்ட பகுதிக்காக 100 ரூபா பணத்தை வழங்கி அனுமதியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

சுப்பிரமணியம் பூங்கா பக்கம் உள்ள நுழைவாயில் மூடப்படும். சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவர்களும் ஆசிரியர்களும் பழைய மாணவர்களும் பொதுநூலகப் பக்கமாக மைதானத்துக்கு மேற்குத் திசையிலிருக்கும் வாயில் ஊடாக அனுமதிக்கப்படுவர்.

ரிம்மர் மண்டப பக்கமாக உள்ள வாயில் ஊடாக மத்திய கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பழைய மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்.

அணிகளின் வீரர்களும் மாணவத் தலைவர்களும் தவிர்ந்தோர் எல்லைக் கோட்டுக்குள்ளே எக்காரணம் கொண்டும் உட்பிரவேசிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

ஆரம்ப நாள் நிகழ்வு இன்று வியாழக்கிழமை முற்பகல் 9.15 மணிக்கு வீரர்கள் அறிமுகம் இடம்பெற்று போட்டி மு.ப.10 மணிக்கு போட்டி ஆரம்பமாகும் என கல்லூரி அதிபர்கள் அறிவித்துள்ளனர். (ஐ)

## மேற்கிந்திய தீவுகளை வீழ்த்தியது இங்கிலாந்து

மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான முதலாவது ரி - 20 போட்டியில், இங்கிலாந்து அணி 4 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம், மூன்று போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் இங்கிலாந்து அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலைப் பெற்றுள்ளது.

சென்.லுசியா மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத் தடுப்பைத் தீர்மானித்தது.

இதன்படி களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி, 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 160 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகட்ச ஓட்டமாக நிக்கோலஸ் பூரான் 58 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார். பந்து வீச்சில் டொம் கர்ரன் 4 விக்கெட்டுகளையும், கிறிஸ் ஜோர்தான் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனைதொடர்ந்து, 161 என்ற வெற்றி இலக்கை நோக்கிப் பதிலுக்கு களமிறங்கிய இங்கிலாந்து அணி, 18.5 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தத

இதனால் இங்கிலாந்து கிரிக்கெட் அணி 6 விக்கெட்டுகளால் வெற்றியைப் பதிவு செய்தது.

இதன்போது இங்கிலாந்து அணி சார்பில், அதிகபட்ச ஓட்டமாக ஜோனி பெர்ஸ்டோவ் 68 ஓட்டங்களைபெற்றுக்கொண்டார். பந்துவீச்சில் அதிகபட்சமாக செல்டோன் கொ:ட்ரெல் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக 40 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 9 பவுண்ரிகள் அடங்களாக 68 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்ட ஜோனி பெர்ஸ்டோவ் தெரிவுசெய்யப்பட்டார்.

## சகல துறையிலும் கலக்கிய தமிழக வீரர் ஆஸ்திரேலியாவை வீழ்த்தியது இந்தியா!

ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் இந்திய அணி, 8 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

ஆஸ்திரேலிய அணிக்கும் இந்திய அணிக்கும் இடையிலான இராண்டாவது ஒருநாள் கிரிக்கட் போட்டி நேற்றுமுன்தினம் செவ்வாய்கிழமை நாக்பூரில் நடைபெற்றது.

போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.


இதன்படி துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 48.2 ஓவர்களில் சகல விக்கடடுக்களையும் இழந்து, 250 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் விராட் கோஹ்லி 116 ஓட்டங்களையும், தமிழக வீரர் விஜய் சங்கர் 46 ஓட்டங்களையும், பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் பெட் கம்மிங்க்ஸ் 4 விக்கட்டுக்களையும், எடம் சம்பா 2 விக்கட்டுக்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து 251 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி, 49.3 ஓவர்களில் சகல விகட்டுக்களையும் இழந்து, 242 ஓட்டங்களை மாத்திரமே வெற்று 8 ஓட்டங்களினால் தோல்வியைத் தழுவிக் கொண்டது.

துடுப்பாட்டத்தில், ஸ்டொய்னீஸ் 52 ஓட்டங்களையும், ஹேண்ட்ஸ்கொம்ப் 48 ஓட்டங்களையும், பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில், குல்தீப் யாதவ் 3 விக்கெட்டுக்களையும், பும்ரா, விஜய்சங்கர் ஆகியோர் தலா 2 விக்கட்டுக்களையும் வீழ்த்தினர்.



போட்டியின் இறுதி ஓவரில் 11 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில், பந்து வீசிய விஜய் சங்கர் முதல் மூன்று பந்துகளில் இரண்டு ஓட்டங்களை மாத்திரம் விட்டுக் கொடுத்து இரண்டு விக்கட்டுக்களையும் வீழ்த்தி இந்திய அணிக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்தார்.

இந்த வெற்றி இந்திய அணியின் 500 வது வெற்றியாக அமைந்துள்ளமை விசேட அம்சமாகும். இந்த வெற்றியின் மூலம், ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் இந்திய அணி, 2:0 என முன்னிலைப் பெற்றுள்ளது. இவ்விரு அணிகளுக்கிடையிலான மூன்றாவது ஒருநாள் போட்டி 8 ஆம் திகதி ராஞ்சியில் நடைபெறவுள்ளது.

## உதைபந்தாட்டப் போட்டியில் சுருண்டு விழுந்து பலியான வீரர்!



காபோன் நாட்டில் உதைபந்தாட்டப் போட்டியின் போது திடீரென மயங்கி விழுந்த வீரர் பரிதாபமாக பலியாகியுள்ள சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

காபோன் நாட்டின் தலைநகரான லிபரல்வில் அகண்டா மற்றும் மிஸ்ஸிலி அணிகளுக்கு இடையிலான முதல் பிரிவுப் போட்டியின் போதுதான் இந்த அதிர்ச்சி சம்பவம் நடந்துள்ளது.

விளையாடி கொண்டிருந்த 30 வயதான ஹெர்மன் ஸிங்கா திடீரென மயங்கி தரையில் விழுந்துள்ளார். இதனை பார்த்து அதிர்ச்சியடைந்த சக வீரர்கள் உடனடியாக அம்புலன்ஸுக்கு தகவல் கொடுத்துள்ளனர்.

ஆனால் வாகனம் தாமதமாகவே மைதானத்திற்கு வருகை தந்திருக்கிறது. பின்னர் அங்கு வந்த மருத்துவர் முதலுதவி சிகிச்சை கொடுத்து, மயக்க நிலையில் இருந்த ஹெர்மனை மீட்க முயற்சித்துள்ளார்.

ஆனால் எந்த பலனும் அளிக்காததால் வேகமாக மருத்துவமனைக்கு எடுத்து சென்றுள்ளனர். ஆனால் அதற்குள் சிகிச்சை பலனின்றி ஹெர்மன் உயிரிழந்து விட்டாரென உள்ளூர் ஊடகங்கள் தெரிவிக்கின்றனர்.

ஹெர்மன் இறந்தமைக்கான காரணம் தெரியாத நிலையில், மாரடைப்பு காரணமாக இறந்திருக்கலாம் எனவும் சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது.

## ஜெனீவாவில் வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி சரத் அமுனுகம, மஹிந்த சமரசிங்க ஆகியோரைக் கொண்ட குழுவே ஜெனீவா கூட்டத்தொடரில் ஜனாதிபதி சார்பில் பங்கேற்கவுள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸில் கூட்டத்தொடரில், இலங்கை அரசின் சார்பில் உயர்மட்டக் குழு பங்கேற்பதில்லை என்றும், ஜெனீவாவில் உள்ள இலங்கைப் பிரதிநிதியே அதனைக் கையாள்வார் என்றும் வெளிவிவகார அமைச்சினால் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டது.

எனினும், ஜனாதிபதி தமது கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் வடக்கு மாகாண ஆளுநரையும் ஜெனீவாவுக்கு அனுப்ப முடிவு செய்திருக்கிறார்.

இலங்கை விவகாரத்தில் வெளிநாட்டுத் தலையீடுகளுக்கு எதிர்ப்பு வெளியிடுவற்காகவே இவர்கள் ஜெனீவாவுக்கு அனுப்பப்படவுள்ளனர்.

போர் முடிந்து 10 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், பழைய வடுக்களைக் கிளறாமல், எமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொள்வதற்கு இடமளிக்குமாறு இவர்கள் ஜெனீவாவில் கோரிக்கை விடுக்கவுள்ளனர் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நேற்றைய ஊடக சந்திப்பில் ஜனாதிபதியுடன் வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனும் கலந்து கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஐ.நாவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்பட வேண்டும் என்று சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று ஜெனீவாக் கூட்டத்தொடர் தொடர்பில் தினேஷ்குணவர்னஎம்.பியால் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்– மஹிந்த ஆட்சியின்போர்து, இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அத்துடன், இலங்கைக்கு எதிராகபொருளாதாரத்தடைகளை விதிப்பதற்கு அனைத்துலக சமூகம் தயாராகி வந்தது. எனவே, இங்கு ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்காவிட்டால் சர்வதேசத் தடை அமுலுக்கு வந்திருக்கும்.

எமது ஆட்சியின்கீழ்தான் சர்வதேசப் பிடிக்குள் இருந்து நாட்டை மீட்டெடுத்து, மின்சாரக் கதிரை அச்சுறுத்தலிலிருந்து மஹிந்தவையும் காப்பாற்றினோம். எனவே, சர்வதேசத்துடன் முரண்படமுடியாது–என்றார். (ஐ)

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கரன்னகொட மற்றும் கடற்படையினருக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம் தாக்கல்செய்யப்படவுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொலை, அதற்கு உதவி செய்தமை, கொலை செய்வதற்காக திட்டமிட்டமை ஆகிய குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இந்த குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட உள்ளது.

கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக, முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட மற்றும் கடற்படையினருக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம்தாக்கல்செய்யப்படவுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது. கொலை, அதற்கு உதவி செய்தமை, கொலை செய்வதற்காக திட்டமிட்டமை ஆகிய குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இந்தக் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட உள்ளது. (ஐ)

## முகமாலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் மேரியன் ஹேகன் தெரிவித்துள்ளார்.

நோர்வேயின் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் மேரியன் ஹேகன் நேற்று முகமாலைப் பகுதிக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார்.

முகமாலைப் பகுதியில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை 3 ஆண்டு காலப்பகுதிக்குள் அகற்றி முடிப்பது தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டு வருவதாக நோர்வேயின் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் மேரியன் ஹேகன் தெரிவித்துள்ளார். நோர்வேயின் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் மேரியன் ஹேகன் இன்று முகமாலைப் பகுதிக்கு பயணம் மேற்கொண்டிருந்தார்.

நேற்று முற்பகல் இந்தப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளை அவர் பார்வையிட்டிருந்தார். நோர்வே அரசின் உதவியுடன் இந்தப் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில் இந்த பயணம் அமைந்துள்ளது.

ஊடகங்களுக்கு மேரியன் ஹேகன் கருத்துத் தெரிவிக்கையில், இப்பகுதியில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை அகற்றுவதற்காக நோர்வே அரசு இலங்கைக்கு 3 ஆண்டுகளுக்கு உதவ உள்ளதாகவும், இவ்விடயம் தொடர்பில் பிரதமருக்கு நோர்வே அரசு வாக்குறுதி அளித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்தப் பகுதியில் குறுகிய காலப்பகுதிக்குள் கண்ணிவெடி அகற்றி முடிப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும், மிகவும் பயங்கரமான வெடிபொருட்கள் அப்பகுதியில் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## தெற்கிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகப் பிரதானிகளுடனான சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

அங்கு மேலும் தெரிவித்த ஜனாதிபதி,

போரினால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு – கிழக்குப் பகுதியில் போதைப்பொருள் பாவனை, அபிவிருத்திக் குறைபாடுகள், பொருளாதாரப் பிரச்சினைகள், வறுமை போன்ற பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. அவை தொடர்பாகக் கவனம் செலுத்தவேண்டிய அவசியமாகும்.

குறிப்பாக குடிதண்ணீர்ப் பிரச்சினை வடக்கில் பெரும் சிக்கலாக உருவெடுத்துவருகின்றது. எனவே, தென்னிலங்கையில் விரயமாகின்ற நீரை குழாய் வழி யாக வடக்கு நோக்கிக் கொண்டு செல்வது தொடர்பாக ஆராயப்பட்டு வருகின்றது. இதற்கு வெளிநாட்டு ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் திட்டமிட்டு வருகின்றோம் – என்றார். (ஐ)

## ஜெனீவா விவகாரத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிவிவகார அமைச்சு ஏற்கனவே தீர்மானித்த நிலையில் – தனது சார்பில் பிரதிநிதிகளை அனுப்பி, ஐ.நா. தலையீடுகளை எதிர்ப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எடுத்துள்ள நிலைப்பாட்டால் அரசுக்குள் மோதல் வெடித்துள்ளது.

இருவரும் தனித் தனிக் குழுக்களை ஜெனீவாவுக்கு அனுப்புவதால் அங்கு இலங்கை அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தும் குழு எது என்பதில் சிக்கல் நிலை எழுந்துள்ளது.

ஜனாதிபதியின் நிலைப்பாட்டை நிராகரித்துள்ள ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு, ஜெனீவாக் கூட்டத்தொடரில் முன்வைக்கப்படும் தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கப் போவதாகவும் அறிவித்துள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸிலின் தற்போதைய கூட்டத்தொடரில், இலங்கை தொடர்பான முன்வைக்கப்படவுள்ள தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கவேண்டாம் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரியுள்ள நிலையிலேயே, ரணில் விக்கிரமசிங்கவின் அரசு இந்த முடிவை எடுத்துள்ளது.

ஜெனீவா தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்குவதன் மூலம், உறுதியானதும், நீடித்து நிலைக்கக் கூடியதுமான நல்லிணக்கத்தை அடைவதற்கு இலங்கை அரசு, அர்ப்பணிப்பைக் கொண்டுள்ளது என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நடைமுறைப்படுத்தல் செயற்பாடு, இலங்கையர்களுக்கு எதிராக தொடர்ச்சியாகச் சுமத்தப்படும் அனைத்துலகப் போர்க் குற்றச்சாட்டுகளில் இருந்து தடுக்கின்ற உத்தியாக இருக்கும். இலங்கையில் நிலையான நல்லிணக்கத்தை எட்டுவதற்காக பல்வேறு உறுதியான செயல்முறைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எல்லாப் பொறிமுறைகளும், நல்லிணக்கச் செயல்முறைகளும், இலங்கை அரசின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றன.

இலங்கைப் போர் வீரர்களுக்காக முதலைக்கண்ணீர் வடிப்பவர்கள், மாலி, மேற்காபிரிக்கா உள்ளிட்ட நாடுகளில் இலங்கைப் படையினர் ஐ.நா அமைதிப்படையில் நிறுத்தப்பட்டுள்ளனர் என்பதை மறந்து விட்டனர்.

ஜெனீவா தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியதால் தான் இது சாத்தியமானது.

மேலும் இராணுவ – இராணுவ ஒத்துழைப்பு விரிவடைந்துள்ளதுடன், இலங்கைப் படையினருக்கான பயிற்சி வாய்ப்புகளும் கிடைத்துள்ளன. எமது படையினரின் கௌரவம் பாதுகாக்கப்பட்டுள்ளது. மனித உரிமை செயல்முறைகளின் மூலம், அனைத்துலகச் சமூகத்தின் நம்பிக்கை மீளப்பெறப்பட்டிருக்கிறது.

மாலியில் இறந்த இரண்டு இலங்கைப் படையினரின் இறுதிச் சடங்குகளில் இதனை நாம் காணமுடிந்ததுஎன்றும்–இலங்கை வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதனால், பிரதமர் தரப்பு நிலைப்பாட்டை கேட்பதா, ஜனாதிபதி தரப்பு நிலைப்பாட்டை கேட்பதா? என்று ஜெனீவாவில் உள்ள இலங்கைக்கானவதிவிட அலுவலகம் தடுமாறுவதாகக் கூறப்படுகின்றது.

ஜெனீவாக் கூட்டத்துக்குதனது சார்பில் வடக்கு மாகாண ஆளுநர் உட்பட மூவரை அனுப்பவுள்ளார் என்று ஜனாதிபதி மைத்திரிபால நேற்று அறிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஜெனீவாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விலகி விடாத வகையில் இறுக்கமான இராஜதந்திர நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

– இப்படி நேற்றுக் கூடிய தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் கூட்டத்திலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலும் முடிவு செய்யப்பட்டதாக அறிய வந்தது.

இலங்கை தொடர்பில் சர்வதேசத்தின் கண்காணிப்பை நீடிப்பது தொடர்பான நடவடிக்கை சம்பந்தப்பட்ட இணை அனுசரணை நாடுகளினால் முன்னெடுக்கப்படுகின்றது. அந்த நடவடிக்கையில் இலங்கையும் இணைந்து, இலங்கை தொடர்பான பிரேரணைக்கு இம்முறையும் அது அனுசரணைப் பணி வகிப்பதை உறுதிப்படுத்த வேண்டும். அந்தப் பங்களிப்பில் இருந்து இலங்கை தப்பியோ, விலகியோ செல்ல இடமளிக்காத வகையில் இறுக்கமான இராஜதந்திர நடவடிக்கைகளைக் கூட்டமைப்பு எடுக்க வேண்டும்என்றும்ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கொழும்பில் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவின் கூட்டமும் ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டமும் நடைபெற்றன.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ரெலோ சார்பில் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., ஜனா, ஹென்றி மகேந்திரன் ஆகியோரும் –

புளொட் சார்பில் சித்தார்த்தன் எம்.பி, இராகவன் ஆகியோரும் –

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் அதன் தலைவர் மாவை சேனாதிராசா எம்.பி., எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. ஆகியோரும் – பங்குபற்றினர்.

கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் எம்.பி. கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

ஜெனீவாவில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்களில் இருந்து வெளியேறும் முடிவைச் செயற்படுத்துவதற்காக இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனியான குழு ஒன்றை ஜெனீவாவுக்கு அனுப்பவுள்ளார் என வெளியாகியுள்ள செய்தி குறித்து அங்கு முதலில் பேசப்பட்டது.

ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் இருந்து இலங்கை விலகி விடாமலும் –

இம்முறை கொண்டு வரப்படுகின்ற, புதிய பிரேரணையையும் இம்முறையும் இலங்கையும் சேர்ந்தே அனுரசணைப் பணி வகித்துக் கொண்டு வரும் கட்டாயத்தை ஏற்படுத்தவும் –

உரிய இராஜதந்திர வழிப்படுத்தல்களைச் செய்ய வேண்டும் எனக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இலங்கை விவகாரத்தை ஜெனீவா மனித உரிமைகள் கவுன்ஸிலில் முடித்துக் கொண்டு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு அதைப் பாரப்படுத்தக் கூடிய நடவடிக்கை எடுக்கப்பட முடியாதா என்று எழுப்பட்ட கேள்விக்கு சுமந்திரனும், சம்பந்தனும் பதிலளித்தனர்.

"இதற்கு முதல் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட இரண்டு தீர்மானங்களிலும் இலங்கைக்குக் காலக்கெடு எதுவும் கொடுக்கப்படவில்லை. இலங்கை தொடர்பாக சில முடிவுகள் பரிந்துரைக்கப்பட்டன. அந்தப்பரிந்துரைகளை இலங்கை நடைமுறைப்படுத்தியமை குறித்து அறிக்கை சமர்ப்பித்து ஆராய நேர அட்டவணை போடப்பட்டது. அது இலங்கைக்கு வழங்கப்பட்ட காலக்கெடு அல்ல. காலக்கெடு விதிக்காமல் கால அவகாசம் என்று பேசமுடியாது. புதிய பிரேரணை மூலம் வழங்கப்பட போவதும் கால அவகாசம் அல்ல. இலங்கை மீதான சர்வதேசக் கண்காணிப்பு மேலும் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு நீடிக்கின்றது என்பதே அதன் அர்த்தமும். அது காலக்கெடுவோ, கால அவகாசமோ அல்ல.

இந்தத் தீர்மானங்களிலும், இனி வரப்போகும் பிரேரணையிலும் குறிப்பிடப்படும் கடப்பாடுகளை இலங்கை நிறைவேற்றுவதற்கு – இலங்கையை நிறைவேற்ற வைப்பதற்கு – சாத்தியமான அனைத்து வழி வகைகளையும் ஐ.நா. எடுக்க வேண்டும் என நாம் கோருவோம். சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கொண்டுசெல்லும் வழிவகையும் சாத்தியமானால் அதில் ஒன்றாக அமையலாம். அப்படிக் கோரலாமே தவிர, சர்வதேச நீதிமன்றுக்குக் கொண்டு போவதை மட்டும்தான் செய்ய வேண்டும் என நாம் கோரமுடியாது."

– என்று சுமந்திரன் விளக்கமளித்தார்.

கூட்டமைப்புஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலும் இந்தக் கருத்து ஏற்றுக் கொள்ளபட்டது என அறியவந்தது. (உ)

## வாள்வெட்டுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணியளவில் வாள் மற்றும் கோடாரிகள்தாங்கியகுழுவொன்று சரமாரியான தாக்குதலை நடத்தியுள்ளது. தாக்குதல் நடத்திய குழுவினர் மட்டுவில் சந்தியில் நின்று தொடர்ந்தும் அட்டகாசம் செய்து வந்ததால், அப்பகுதியில் பதற்ற நிலை காணப்பட்டது.

சமாதான நீதவான் ஒருவரின் வீட்டின் மீதே இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சாவகச்சேரிப் பொலிஸார் மற்றும் 119 அவசரப் பொலிஸாருக்கு அறிவித்தல் கொடுத்தும் சம்பவ இடத்துக்கு பொலிஸார் உரிய நேரத்தில் செல்லவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

தலைக்கவசம் இல்லாமல், இலக்கத்தகடுகள் அற்ற மோட்டார் சைக்கிளில் வந்த மர்மநபர்களாளேயே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இருபது பேர் அடங்கிய குழுவினர் தாக்குதலை நடத்திவிட்டு மட்டுவில் சந்தியில் அட்டகாசத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் அப்பகுதியில் பதற்றமான நிலை காணப்பட்டது. (ஐ)

## வருட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றமானது பலவீனமான முறையில் இயங்குகின்றது. எனவே, அதற்குரிய தேர்தலை நடத்த வேண்டியுள்ளது. எனவே, இவ்வருடத்தில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் பொதுத்தேர்தல் இடம்பெறலாம். என்றும் ஜனாதிபதி கூறினார். (ஐ)

## எந்தக் கொம்பன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனித உரிமை அமைப்புகள் கண்டனம் வெளியிட்டுள்ளமை குறித்து கேள்வி எழுப்பட்டது.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி,

எந்தவொரு எதிர்ப்பு வந்தாலும் 'தூக்குத் தண்டனையை நிறைவேற்றுவதில் உறுதியாக உள்ளேன். நாட்டின் நன்மை கருதியே இந்த முடிவை எடுத்துள்ளேன்.

போதைப்பொருள் தடுப்பு வேலைத்திட்டம் நாடு முழுவதும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அதற்காக அனைத்து பிரிவினரின் ஆதரவும் மிகவும் சிறப்பான முறையில் கிடைக்கின்றது. – என்றார். (ஐ)

# போர்க்கால பட்ஜெட் இது! தமிழருக்கு ஏமாற்றம்தான்!!

## சிறிதரன் எம்.பி. சபையில் சாடல்



கொழும்பு, மார்ச் 07

2019ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டமானது அபிவிருத்திக்கானதல்ல. இதனை ஒரு யுத்த வரவு-செலவுத் திட்டமாகவே நாம் நோக்குகிறோம். இதன் மூலம் நாங்கள் ஏமாற்றப்பட்டிருக்கிறோம்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன்.

யுத்தம் இல்லாத நாட்டில் பாதுகாப்புச் செலவீனத்துக்கு எதற்காக அதிகளவு நிதி வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கவேண்டும் எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

புதிய வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நேற்று நடைபெற்றது. இதில் கலந்துக்கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும்ம் தெரிவிக்கையில்–

தசாப்த கால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட நிலையில் வடக்கு- கிழக்கில் தமிழ் மக்கள் தொடர்ந்தும் இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்நிலையில், புதிய வரவு–செலவுத் திட்டத்தில் ஆறில் ஒரு பங்கு என்ற பெருந்தொகை பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. நாட்டில் சமாதானம் நிலவுகின்ற நிலையில் ஏன் இவ்வளவு தொகை பாதுகாப்புக்கு ஒதுக்கப்பட்டுள்ளது?

தமிழர் வாழ்கின்ற பிரதேசங்களில் யுத்தம் நிறைவடைந்து 10 ஆண்டுகளின் பின்னரும் தொழில் வாய்ப்பை ஏற்படுத்துவதற்கு இது வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

அங்குள்ள இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கு இந்த வரவு–செலவுத் திட்டத்தினூடாக நடவடிக்கை எடுத்திருக்கலாம். ஆனால், அவ்வாறான நடவடிக்கை எதுவும் முன்னெடுக்கப்படாத நிலையில் நாங்கள் ஏமாற்றப்பட்டிருக்கிறோம். வெறும் அபிவிருத்திக்கான வரவு–செலவுத் திட்டம் எனக் கூறுவதன் மூலம் மாத்திரம் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது–என்றார். (ஐ)



## மானிப்பாய் வீடொன்றின் மீது வாள்வெட்டுக் குழு தாக்குதல்!

மானிப்பாய் பகுதியில் உள்ள வீடொன்றின் மீது வாள்வெட்டுக் கும்பல் தாக்குதலை மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளதாக மானிப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மானிப்பாய் பகுதியில் உள்ள வீடொன்றினுள் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை இரவு ஆறு பேர் கொண்ட வாள்வெட்டுக் கும்பல் ஒன்று வீட்டின் கதவுகள், ஜன்னல்கள் என்ப வற்றை அடித்து சேதமாக்கியதுடன், வீட்டி னுள் இருந்த தொலைக்காட்சிப் பெட்டி உள்ளிட்ட வீட்டு உபகரணங்களையும் அடித்து உடைத்தது.

அத்துடன் வீட்டின் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றையும் அடித்துச் சேதமாக்கிவிட்டு அங்கிருந்து அந்தக் கும்பல் தப்பிச் சென்றுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் வீட்டின் உரிமையாளரால் மானிப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, மட்டுவில், சுன்னாகம் மற்றும் மானிப்பாய் ஆகிய பகுதிகளில் நேற்முன்தினம் இரவு வாள்வெட்டுக்குழுக்கள் அப் பகுதிகளில் உள்ள மூன்று வீடுகளின் மீது தாக்குதல் மேற்கொண்டமையுடன் வாகனங் களையும் சேதமாக்கியுள்ளன. (ஐ)

## சிலாவத்துறைக் கடற்படை முகாம் உடனடியாக அகற்றப்படவேண்டும்

### முசலி பிரதேச செயலக மீளாய்வுக் கூட்டத்தில் வலியுறுத்தல்

மன்னார், மார்ச் 07

சிலாவத்துறை கடற்படை முகாமை உடனடியாக அகற்றுமாறு ஜனாதிபதியிடம் அவசர கோரிக்கை முன்வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முசலி பிரதேச செயலக மீளாய்வுக் கூட்டம் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தலைமையில் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தின்போதே மேற்படி தீர் மானம் எடுக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக அமைச்சர், வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவனுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு உரையாடினார்.

முன்னதாக, சிலாவத்துறைக் கடற்படை முன்பாகக் கடந்த 15 நாள்களாகப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்களையும் அமைச்சர் சந்தித்து குறைகளைக் கேட்டறிந்தார்.

அதன் பின்னர் முசலி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற மீளாய்வுக்கூட்டத்தின் போது, மண் மீட்புப் போராட்டத்தில் ஈடுபடும் மக்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டு தமது போராட்டத்தின் நியாயங்களை எடுத்துரைத்தனர். (ஐ)

## வீட்டுத்திட்டம் வழங்கக்கோரி வவுனியாவில் ஆர்ப்பாட்டம்!

வவுனியா, மார்ச் 07

வவுனியா, இராசேந்திரங்குளம் விக்ஸ்காடு பகுதி மக்கள் தமக்கு வீட்டுத்திட்டம் வழங்கக் கோரி நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

வவுனியா பிரதேச செயலகத்துக்கு அருகாமையில் நேற்று முற்பகல் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. கடந்த 10 வருடங்களாகத் தமக்கு வீட்டுத்திட்டம் வழங்கப்படவில்லை என்றும், தற்காலிகக் கொட்டகைகளிலேயே தாம் வசித்து வருகின்றனர் என்றும் அந்த மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

47 குடும்பங்கள் வசித்து வருகின்ற தமது கிராமத்தில், பிரதேச செயலகத்தால் பலருக்கு வீட்டுக்கான பதிவுகள் மேற்கோள்ளப்பட்டபோதும் தமக்கு வீட்டுத் திட்டம் வழங்கப்படவில்லை என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் சுட்டிக்காட்டினர். (ஐ)



## சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு இந்தியாவில் கௌரவ விருது!



கொழும்பு, மார்ச் 07

சபாநாயகர் கரு ஜயசூரியவிற்கு 'பிரைட் ஒவ் ஏசியா' என்ற கௌரவ விருது வழங்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலுள்ள தொழில்நுட்ப விஞ்ஞானத்துக்கான அப்துல் கலாம் நிறுவனத்தினாலேயே இந்தக் கௌரவ விருது வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் மறைந்த முன்னாள் இந்திய ஜனாதிபதி அப்துல் கலாமின் நெருங்கிய நண்பரான விஞ்ஞானி பாரத் விஜய உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ஐ)


## NEW ASIAN CENTER

56/15B, Stanley Road, Jaffna. T.P. 0778249949 021 221 7474

வீட்டு மின் பாவனையாளர்களே எந்தவித மின்சார கட்டணமும் இன்றி இலவசமாக மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்!



* வீடுகளில் தங்களின் மின்சாரக் கட்டணத்தைச் செலுத்துவோர் அதை தங்களுக்குரிய அரிய முதலாக மாற்றும் ஒரு வாய்ப்பு.

* வழமையான மின்கட்டணத்தை நீண்ட கால சேமிப்பாக்கிக் கொள்ள சந்தர்ப்பம் கிட்டியுள்ளது.

* மாதாந்தம் தங்கள் வீட்டுக்கு 200 யுனிற் வரை மின்சாரத்தைப் பயன்படுத்துவோர், அந்தக் கட்டணத்தைத் தொடர்ந்து 60 மாதங்கள் மட்டுமே செலுத்தியபடி, அடுத்த இருபது வருடங்களுக்கு எந்தவித மின்கட்டணமுமின்றி அதேயளவு மின்சாரத்தை தங்குதடையின்றிப் பெற இந்த முறைமை வாய்ப்பளிக்கின்றது.

* உங்கள் வீட்டில் சூரிய சக்தி மின் உற்பத்தி அலகு ஒன்றைப் பொருத்திக் கொள்ளுங்கள். சுமார் மூன்றரை லட்சம் ரூபா பெறுமதியான இந்த உபகரணத்துக்கு அரசு இலகு முறையில் முழு வங்கிக் கடன் தருகின்றது. அதற்கான வட்டி ஆக 6.75 வீதம்தான். இந்தக் கருவி மூலம் மாதாந்தம் சுமார் 260 யுனிற் மின்சாரம் பெற்றுக் கொள்ளலாம். வழமையான மின கட்டணத்துக்கான கொடுப்பனவை ஐந்து வருடங்களோ அல்லது ஆறு வருடங்களோ மேற்படி மூன்றரை லட்சம் ரூபாவுக்காக அரச கடனை மீளச் செலுத்துவதற்காகக் கட்டி முடித்து விடலாம்.

* மேற்படி சூரியசக்தி மின் உற்பத்தி அலகுகள் இருபத்தியைந்து வருட செயல் உத்தரவாதம் உள்ளவை. ஐந்து அல்லது ஆறு வருட கடன் நிலுவைக் காலம் முடிந்ததும் அதன் பின்னர் அடுத்த இருபது ஆண்டு காலத்துக்கு நீங்கள் பெறப் போகின்ற மின்சாரம் உங்களுக்கு இலவசம் அல்லது உங்களுக்கு வரவு.

*உங்கள் சூரிய மின் உற்பத்திக் கருவி மூலம் உற்பத்தியாகும் மின்சாரத்தில் நீங்கள் வீட்டுக்குப் பயன்படுத்தியமை போக எஞ்சிய மின்சாரத்தை உங்களிடமிருந்து இலங்கை மின்சார சபை பணம் கொடுத்தும் வாங்கிக் கொள்கின்றது என்பதும் கவனிக்கத்தக்கது.

| யுனிற் (வீதம்) | ரூ. 350.000 வட்டி (ரூபா) | நாம் செலுத்த வேண் டிய மின்சார கட்டணம் | மேலதிகமாக மின்சாரம் மின்சார நிலையத்திற்கு விற்பனை செய்தால் வருமானம் (மாதாந்தம்) | மொத்தம் | வங்கிக்கு |
|---|---|---|---|---|---|
| 200 | 1866/= | 3096/= | 1320/= | 4416/= | 72 மாதம் |
| 220 | 1866/= | 3970/= | 880/= | 4850/= | 65 மாதம் |
| 240 | 1866/= | 4920/= | 440/= | 5360/= | 58 மாதம் |
| 260 | 1866/= | 5922/= | ---- | 5922/= | 52 மாதம் |


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.03.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.